உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-170

நவம்பர் 1-15 2023




## முன்னோர் ஆத்மா சாந்தி அடைய உதவும் மத்தாப்பு ஒளி?

## பட்டாசுக்கு நேர கட்டுப்பட்டு? தடையை நீக்குமா தமிழக அரசு?

# கங்கைக்கு நிகராக பாவத்தை போக்கும் காவேரி

கவேரன் என்ற அரசன், தனக்குப் புத்திர பாக்கியம் இல்லாததால் பிரம்மாவைக் குறித்துத் தவம் செய்தான்.

பிரம்மா, "உனக்குப் புத்திர பாக்கியம் இல்லா விட்டாலும், ஒரு குழந்தையை அளிக்கிறேன்" என்று கூறி, தன் மனத்தால் ஒரு பெண் குழந்தையை உண்டாக்கி அவனிடம் அளித்தார். காவேரி என்ற பெயரில் அவனிடம் வளர்ந்த அப்பெண், தகுந்த கணவனை வேண்டித் தவம் செய்யலானாள். aanmeegamalar.com

பின்னர், அகஸ்த்திய முனிவரைக் கண்ட காவேரியானவள், இவரே தனது மணாளர் ஆவார் என்று நினைத்து, லோபாமுத்ரா என்ற பெயருடன் அவரை திருமணம் செய்து கொண்டவுடன், அவள் விரும்பியபடியே, நதி ரூபமாகி, பிற நதிகளுக்கும் மனிதர்களுக்கும் ஏற்பட்ட பாவங்களை நீக்கவும், மோக்ஷத்தை அளிக்கவும் மறு அம்சமாகத் திகழுமாறு, அகஸ்த்ய ரிஷி அருளினார். aanmeegamalar.com

கங்கைக்கு நிகரான காவிரியில் நீராடினாலும், தரிசித்தாலும், அதனை பக்தியுடன் தொட்டாலும் அதன் கரையில் தானம், தர்ப்பணம் செய்தாலும் எல்லா பாவங்களும் விலகி, புண்ணியம் கிட்டும். இதன் கரைகளில் காசிக்கு சமமான ஸ்தலங் களும் இருக்கின்றன.



இந்த நதி கங்கைக்கு நிகராக பாவத்தைப் போக்கும் சக்தி படைத்தது.

அஸ்வமேத யாகம் செய்யத் தொடங்கிய அரிச்சந்திர மகாராஜாவை, முனிவர்கள், பிராயச் சித்தமாக துலா மாதத்தில் காவி ரியில் நீராடிவிட்டு வரச்சொன்னார்கள். அந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது காவேரி.

## திருமண வரமருளும் அஷ்டமி யாகம்

கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ.தொலை வில் உள்ளது, நாதன்கோயில். இங்கு சுக்லபட்ச அஷ்டமி நாளில், ஸ்ரீஸூக்தயாகம் சிறப்பாக நடைபெறுகிறது. திருமணத்தடை உள்ளவர்கள், தொடர்ந்து எட்டு அஷ்டமி யாகங் களில் கலந்து கொண்டு, செண்பகவல்லித் தாயாரை தரிசித்தால், தடைகள் அகன்று திருமணம் நிச்சயமாகிறது. தம்பதியர், இந்த யாகத்தை தரிசிக்க, அவர்களிடையே ஒற்றுமை ஓங்கும் என நம்பப்படுகிறது.



## கால்வைத்தாலே போதும் அனைத்தையும் தரும் ஸ்தலம்

திருவாரூர் மாவட்டம் பேரளம் அருகில் உள்ள திருக்கொடியலூர் ஆனந்தவல்லி சமேத அகத்தீஸ்வரர் ஆலயம்.



இத்தலம் எமதர்மனும், சனி பகவானும் பிறந்த தலம் என்று சொல் லப்படுகிறது.


ஒருவருக்கு சனி தோஷம் பிடித் தாலும், எமன் பிடிக்க வந்தாலும் அது வாழ்வில் கஷ்டமான காலம்தான். ஆனால் இவர்கள் பிறந்த இத்தலத்தில் குழந்தையாய், அனைவருக்கும் அருள்தரும் வல்லுநராய், பக்தர்கள் கேட்ட வரத்தைத் தருபவர்களாகவே விளங்குகி றார்கள். அதனால்தான் இந்த தலத்தில் கால் வைத்த உடனேயே நமக்கு அனைத்தும் கிடைக்கிறது. aanmeegamalar.com

e-magazine aanmeegamalar.com

# கல் ஸ்ரீசக்கரம் உள்ள ஸ்தலம், சிவனே சிவனை பூஜித்த ஸ்தலம், மறுபிறப்பை போக்கும் சக்தி வாய்ந்த ஸ்தலம்




மதுரை மாநகரின் மையப் பகுதியில், தெற்கு மாசி வீதி மேலமாசி வீதி இணையும் சந்திப்பில் இம்மையிலும் நன்மை தருவார் கோயில் அமைந் துள்ளது. மக்கள் இப்பிறப்பில் செய்த பாவங்களை சிவபெருமான் இந்த பிறப்பிலேயே மன்னித்து நன்மை தருவதால் இக்கோவில் மூலவர் சொக்க நாதரை, இம்மையிலும் நன்மை தருவார் என்று அழைக்கின்றனர். சிவபெருமான் தன்னை தானே அர்ச்சித்துக்கொண்ட சிறப்புடையது இந்தக் கோவிலாகும்.



மதுரையில், மத்தியில் இருப்ப தால் “மத்யபுரி நாயகி’’ என போற்றப்படும் அம்பி கையை வேண்டிக் கொள்ள, திருமணம் இனிதே கைகூடுகிறது. அதனால், இந்தத் தாய் மாங்கல்ய வரப் பிரசாதினி எனப்படுகிறாள். இந்த தேவி நின்றருளும் தாமரை பீடத்தில், கல்லால் ஆன ஸ்ரீசக்ரம் உள்ளது.

பொதுவாக செம்பில் ஸ்ரீசக்ரம் வரைந்து பிரதிஷ்டை செய்வதே வழக்கம். இங்கு கல்ஸ்ரீசக்ரம் வித்தியாசமானதாகக் கருதப்படுகிறது. பத்து தளங்களைக் கொண்ட தசதளவில்வம் இத்தல விருட்சம்.

ஊர்ப் பெயரை ஒட்டி இத்தல ஈசன் மதுர நாயகர் என்றும் இறைவி மதுரநாயகி என்றும் வணங்கப்படுகின்றனர். பூலோக கைலாயம் என அழைக்கப்படும் இத்தலம், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் தென்மேற்கு திசையில் உள்ளது.

எந்தக் கோவிலுக்கு போனாலும் சிவலிங்கத்தின் முன் பகுதியையே நாம் தரிசிப்போம். ஆனால், இந்தக் கோவிலில் மட்டும் லிங்கத்தின் பின்புற தரிசனமும் நமக்கு கிடைக்கிறது. இங்கே சிவன் அம்பாளுடன் மேற்கு நோக்கி அமர்ந்து லிங்க பூஜை செய்கிறார். எனவே, லிங்கத்தின் முன்பகுதி அவர்களை நோக்கி இருக்கிறது. பக்தர்களுக்கு பின்புற தரிசனம் கிடைக்கிறது.

மதுரையை ஆண்ட மலையத்துவஜனின் மகளாக பிறந்த மீனாட்சியை, ஈசன் சுந்தரேஸ் வரராக வந்து மணந்து கொண்டார். பின் பாண் டிய மன்னராக பொறுப்பேற்க தயாரானார். அரச பீடத்தில் அமர்வதற்கு முன்தாக சிவபூஜைசெய்ய வேண்டும் என்பது ஐதீகம். அதன் அடிப்படையில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்து பூஜை செய்தார். இதன் அடிப்படையில் இங்கு சிவனே, சிவலிங்கத்தை பூஜிக்கும் அமைப்பில் காட்சி தருகிறார்.

திருமணமாகாதவர்கள் இக்கோயில் அம்மனை வேண்டினால் நல்ல வரன் அமையும் என்பதால் இக்கோயில் அம்மனுக்கு ‘மாங்கல்ய வரபிரசாதினி’ என்ற பெயருமுண்டு. மதுரையிலுள்ள பஞ்சபூத தலங்களில் இது பூமித் தலமென்பதால் புது கட்டிடம் கட்டத் துவங்குபவர்கள், பிடி மண்ணை எடுத்து வந்து வழிபடுவதுண்டு. தலைமை பதவி கிடைக்கவும், பணி உயர்வு பெறவும் சிவனுக்கு, ‘ராஜ உபச்சார அர்ச்சனை’ செய்து வேண்டி கொள்கிறார்கள்.

e-magazine
aanmeegamalar.com

# முன்னோர்களுக்கு வழிகாட்டும் தீபாவளி பட்டாசு

## இரண்டுமணிநேரம் மட்டும் வெடி வெடித்தால் எப்படி முன்னோர் ஆத்மா சாந்தி அடையும்? முன்னோருக்கு உதவுமா தமிழக அரசு




தற்போது தமிழகத்தில் பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் இரண்டு வேளைகளுக்கு மட்டும் அனுமதி அளித்துள்ளது, ஆனால் அந்த இரண்டு மணிநேரம் என்பதை பொழுது போக்கு என்பதைக் காட்டிலும், நமது முன்னோர் ஆத்மா இறைநிலையைத் தேடி அலைவதற்கு நம்மால் முடிந்த உதவியை செய்யும் செயலுக்கான தடையாகவே பார்க்கப்படுகிறது.

பட்டாசு என்றால் குழந்தைகள் முதல் பெரிய வர்கள் வரை விரும்பும் ஒரு பொழுது போக்காக மட்டுமே நாம் அறிந்திருப்போம், ஆனால் அதற் குள் ஒரு ரகசியம் உள்ளதை நமது வேத

e-magazine
aanmeegamalar.com



சாஸ்திரத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஆச்சரியமாக உள்ளதா? சாஸ்திரத்தில் பட்டாசு கொளுத்தச் சொல்லப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுவது சகஜம்.

உண்மையில், தீபாவளிக்கு மத்தாப்பு அவசியம் கொளுத்த வேண்டும். அதன் வெளிச்சம் நமது முன்னோர்களை சொர்க்கம் செல்லஉதவுகிறது. என்று வேதத்தில் ஆதாரத்துடன் கூறப்பட்டுள்ளது.

தீபாவளிக்கு ஏன் பட்டாசு வெடிக்க வேண்டும் என்று பலருக்கும் சந்தேகம் இருக்கிறது.

மற்ற வெடிகளை வெடிப்பது பற்றி சாஸ்திரத்தில் ஏதும் இல்லாவிட்டாலும், அவசியம் மத்தாப்பு கொளுத்த வேண்டும் என்று சொல்கிறது.

"ஸ்மிருதி கௌஸ்" என்ற ஸ்தோத்திரத்தில், இதுபற்றி சொல்லப்பட்டுள்ளது. ...

"துலா ஹம்ஸ்தே ஸஹஸ்ராம்சௌ
ப்ரதோஷே பூத தர்ஸயோ:

உல்கா ஹஸ்தா நரா: குர்யு:
பித்ரூணாம்
மார்க தர்சனம்''

என்ற இந்த ஸ்லோகத்தில் "துலா மாதமான ஐப்பசியில், அதாவது தீபாவளியன்று, "உல்கா' எனப்படும் நெருப்பை கையில் பிடியுங்கள் என்கிறது. அதாவது, மத்தாப்பு கொளுத்த வேண்டும். இதில் வரும் "பூத' என்ற வார்த்தை சதுர்த் தசியைக் குறிக்கும்.

அதாவது, நரக சதுர்த்தசி எனப்படும் தீபாவளி.

'தர்சம்' என்ற வார்த்தை "அமாவாசை'யைக் குறிக்கும். ஐப்பசி மாத அமாவாசை.

இந்த இரண்டு நாட்களும் நெருப்பைப் பிடிப்பது கட்டாயம்.

காரணம் என்ன? "பித்ரூணாம்'' என்ற வார்த்தை இதை வெளிப்படுத்துகிறது.

பித்ருக்கள் எனப்படும் நமது முன்னோர், நாம் காட்டும் இந்த வெளிச்சத்தைப் பயன்படுத்தி தங்கள் வழியில் (சொர்க்கம் நோக்கி) முன்னேறிச் செல்வார்கள்.

அதனால் அவசியம் நமது முன்னோர்கள் எந்தவித சிரமம் இன்றி சொர்க்கம் செல்ல அவர்களின் வம்சாவழியில் வந்த ஒவ்வொருவரும் அவசியம் மத்தாப்பு போன்ற பட்டாசுகளை வெடிக்க வேண்டும்.

இந்த வருடத்தில் இருந்து, பட்டாசை விரும்பாதவர்கள் கூட, கண்டிப்பாக மத்தாப்பாவது வாங்கி வெடியுங்கள் நமது முன்னோர் சிரமப்படாமல் சொர்க்கத்திற்கு செல்ல நாம் உதவினால், அவர்கள் ஆசி நமது குடும்பத்திற்கு நன்மை செய்யும்.

மேலும் இந்த தீபாவளியில் வீடுகள் தோறும் அவசியம் விளக்கேற்றி வழிபடுங்கள்.

உல்கா=நெருப்புடன்கூடியகட்டை; (தற்காலத்தில்=மத்தாப்பு)

மேலும் தீபங்களாலும், வாண வேடிக்கைகளாலும் பல தீபங்களை ஏற்றி லக்ஷ்மி தேவிக்கு விசேஷ நீராஜனம் செய்தால் ஐஸ்வர்யத்தை நிரம்பப் பெற்று வாழலாம் என்பதை,

"நீராஜிதோ மஹாலக்ஷ்மீ மர்ச்சயன்
ச்ரியமச்னுதே தீபைர் நீராஜிதா யத்ர
தீபாவளிரிதி ஸ்ம்ருதா"

என்ற வரிகள் தெளிவாக்குகின்றன.

இந்த தீபாவளிக்கு மத்தாப்பு, பட்டாசு, போன்றவற்றை விரும்பி வெடிப்போம், மேலும் விளக்கேற்றி லட்சுமி கடாட்சத்தையும் பெறுவோம்.

பட்டாசு வெடிக்க நேரத்தை ஒதுக்கியுள்ள தமிழக அரசு நமது முன்னோருக்கு உதவும் வகையில் நேர ஒதுக்கீட்டை ரத்து செய்து தற்போதைய மனிதர்களின் பொழுது போக்கிற்கு தடை விதிக்காமலும், நமது முன்னோருக்கு வழிகாட்ட உதவவும் வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைப்போம்.

e-magazine
aanmeegamalar.com

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

தொடர்பு எண்: 9444228203

இ-மெயில் முகவரி:


aanmeegamalar@gmail.com



# இன்பத்தையும் துன்பத்தையும் தீர்மானிக்கும்

# அனுபோகபொருட்கள்

e-magazine
aanmeegamalar.com



ஒரு காட்டில் ஒரு முனிவர் மூன்று செங்கற்கள் மட்டுமே வைத்து வாழ்ந்துவந்தார்.

தூங்கும் போது, ஒரு கல்லை தலைக்கும், ஒரு கல்லை இடுப்பிற்கும், ஒரு கல்லை காலுக்கும் வைத்து தூங்கி விடுவார். ஏனெனில் மழைபெய்தால் கூட, அவருக்கு கீழே ஓடி விடும். அளவான தூக்கம் மட்டுமே கொள்வார்.

சாப்பிடும் போது, மூன்று கல்லையும்சேர்த்து வைத்துக் கொண்டு, அதன் மீது உணவினை இட்டு சாப்பிடுவார்.

ஏனெனில், தரையில் வைத்தால், மண் சோறுடன் கலந்து விடும். மிகவும் குறைவாக உண்ணுவார்.

அமரும் போது, மூன்று கல்லையும் சேர்த்து ஆசனமாக வைத்துக் கொண்டு, அமர்ந்து விடுவார். ஏனென்றால், எந்த ஒரு பூச்சியும், கல்லைச் சுற்றி சென்று விடும்.

இவ்வாறு மூன்று கற்களை மட்டுமே வைத்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்.

தனது கஷ்டங்களுக்கு தீர்வு வேண்டி ஒரு அரசன் முனிவரைசந்திக்க வந்தான். முனிவர் மூன்று கற்களுடன் வாழும் கஷ்டத்தைக் கண்டு, அவரை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல விரும்பினான். முனிவர்

மறுத்தும், அரசனின் பிடிவாதம் காரணமாக ஒத்துக் கொண்டார்.

அரசனின் அரண்மனையில், முனிவருக்கு பொன்னால் ஆன, பலகை போடப்பட்டது. தங்க தாம்பாளங்களில் உணவு வைக்கப்பட்டது. முனிவர் முன்னைப் போலவே, செங்கற்களை சேர்த்து வைத்து, அதில் எப்போதும் சாப்பிடும் சோறின் அளவே போட்டுக் கொண்டு உண்டார்.

அரசனின் அரண்மனையில், ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் முனிவர் உறங்குமாறு கேட்டுக் கொண்டான். முனிவர் முன்னைப் போலவை, மூன்று கற்களை ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் போட்டு, அதன் மீது படுத்துக் கொண்டு உறங்கினார். அளவான தூக்கத்துடன், காலை எழுந்தார்.

மூன்று செங்கற்களையும் சேர்த்து, ஆசனம் செய்து, தியானத்தில் ஆழ்ந்தார்.

இது சில நாட்கள் தொடரவே, அரசன் முனிவர் காட்டில்வாழும் அதே வாழ்க்கை முறையை அரண்மனையிலும் கடைபிடிப்பதைக் கண்டு, முனிவரிடம் அவர் கேட்டுக் கொண்டபடி, காட்டிலேயே விட்டுவிட்டான்.





முனிவர், அரசனிடம் சொன்னார்;

'மன்னா. அனுபோக பொருட்கள் குறைவாக இருக்க, இருக்க நிம்மதி பெருகும். அனுபோக பொருட்கள் பெருக, பெருக துன்பங்கள் பெருகும். எனவே, தேவையைச் சார்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொள். உன்னுடைய எல்லா துன்பங்களுக்கும் உன்னுடைய தேவைக்கு மீறிய ஆசைகள்தான் காரணம். முனிவர் சொன்னதைப் போல், நாம் நமது தேவைகளை சார்ந்து வாழும் போது, அனுபோக பொருட்கள் குறைவாக பயன்படுத்த, எப்போதும் நிம்மதியாக இருக்கலாம். எந்த ஒரு இடத்திலும், நம்மால் முனிவரைப் போல், நிம்மதியாக வாழ முடியும்.




e-magazine
aanmeegamalar.com

# சேலத்தில் உள்ள ஜீவசமாதிகள்

e-magazine
aanmeegamalar.com

## மாயம்மா ஜீவசமாதி

1920 முதல் கன்னியாகுமரி கடற்கரையில் நெடுநாட்கள் வாழ்ந்து வந்த அம்மையார் இவர், 9.2.1992ல் சேலத்தில் ஜீவசமாதி அடைந்தார்,

சேலத்திலிருந்து ஏற்காடு செல்லும் சாலையில் லா காலேஜ் பேருந்து நிறுத்தம் அருகில் இவரது ஜீவசமாதி உள்ளது,

## சாந்தானந்த சுவாமிகள்

1921ல் பிறந்தவர், 27.5.2002ல் ஜீவசமாதி அடைந்தார். சேலத்திற்கு அருகில் உள்ள உடையார்பட்டி மலைக்குன்று பகுதியிலுள்ள ஸ்கந்தாஸ்ரமத்தில் இருக்கும் புவனேஸ்வரி அம்மன் திருவடி பீடத்திற்கு சற்று முன்பாக இவரது ஜீவசமாதி உள்ளது,

## கஞ்சமலை சித்தர்

சேலத்திலிருந்து 21.கி,மீ,தூரத்திலுள்ள கஞ்சமலை அடிவாரத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது, இவரது ஜீவசமாதி இருக்கும் கோயிலுக்கு அமாவாசைக் கோயில் என்று பெயர்,

## அப்பா பைத்தியம்

கரூர் ஜமின் பரம்பரையில் 1859ல் சித்திரை புனர்பூசம் நட்சத்திரத்தன்று பிறந்தார். இவர் ஜீவசமாதியானது 11.02.2000ல் தை மாதம், அசுவினி நட்சத்திரத்தில், சேலம் ரயில்வே ஜங்ஷனிலிருந்து அரை கி.மீ.தொலைவிலுள்ள திருவாக்கவுண்டனூரில் உள்ள தருக விலாஸ் என்னும் சத்குரு மாளிகையில் இவரது ஜீவசமாதி உள்ளது.

ஆன்மிகமலர்.காம்

## அப்பன்ன சுவாமிகள்

சேலம் ஆத்தூரிலிருந்து 15 கி.மீ., தூரத்தில் டவுன் பஸ் மூலம் சென்று வடக்கு மரை கிராமத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது,

## கரடிச் சித்தர்

சேலத்திலிருந்து 5.கி.மீ., தூரத்திலுள்ள உத்தம சோழபுரம் கரபுரீஸ்வரர் சிவன் கோயிலில் இவரது ஜீவசமாதி உள்ளது, ஔவையார் வழிபட்ட கோயில்.

## சரபங்க முனிவர்

சேலம் மேட்டூர் சாலையில் 16.கி,மீ,தொலைவில் உள்ள ஒமலூர் கோட்டையில் வசந்தீஸ்வரர் கோயிலில் உள்ள நவக்கிரக சந்நிதிக்கு அருகில் இவரது ஜீவசமாதி உள்ளது,

## நிர்வாண சுவாமிகள்

சேலம் ஆத்தூரிலிருந்து 5 கி.மீ., தொலைவிலுள்ள தளவாய்பட்டிக்கு வந்து அங்கிருந்து வண்டிப்பாதையில் 3 கி.மீ., தொலைவு நடந்து சென்று அங்குள்ள சாமியார் மடத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது,

## நடேச சுவாமிகள்


ஆத்தூர் சின்ன சேலம் வந்து அங்கிருந்து காரியானூர் வந்தால் இவரது ஜீவசமாதி உள்ளது,

## ஸ்ரீ காகபுஜண்டர் ரிஷி

சேலம் ஆத்தூரில் இருந்து சின்ன சேலம் செல்லும் சாலையில் அம்மையகரம் என்ற ஊர் உள்ளது இங்கிருந்து 2 கி.மீ., தொலைவில் தென்பொன்பரப்பி என்ற ஊரில் ஸ்ரீ சொர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் இவரது ஜீவசமாதி அமைந்துள்ளது.

## பாவை அம்மாள்

தியாகராசர் கல்லூரி பஸ் ஸ்டாப் அருகில் சேலத்தில் உள்ள ஜாகீர் அம்மாபாளையம் காவடி பழனியாண்டவர் ஆசிரமத்தில் இவரது ஜீவசமாதி உள்ளது.



ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
170 க்கும்
மேற்பட்ட
இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.






# இராவணன் கூறிய உபதேசம்...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

எதிரிகளோ... துரோகிகளோ... கெட்ட செயல் புரிபவர்களோ... இவர்களுக்கு இந்த தீய செயலுக்குரிய எண்ணங்கள் தோன்றுவதற்கு முன்பு, நல்ல எண்ணங்கள் தோன்றியிருக்கும், ஆனால் அவற்றை செயல்படுத்த அவர்களின் எண்ணங்கள் தள்ளிப்போட வைக்கும்.

எந்த நல்லதையும் தள்ளிப் போடாமல் நல் லதை நினைத்தவுடன் செயல்படுத்தினாலேபெரும் பாலான தீயவர்கள் உருவாவது தவிர்க்கப்படும்.

அந்த வகையில் புராண இதிகாசங்களில் வரும்

தீய கதாபாத்திரங்கள் நல்லவற்றை பெருமள வில் தவிர்த்து வைராக்கியத்துடன் தீமையை பிடித்துக் கொள்வதால் அவர்கள் வில்லனாகவே கடைசி வரை வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும், அந்த வகையில் இராவணனை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

ராமன் செலுத்திய அம்பில் காயம்பட்டு குற்று யிராய்க் கிடந்த ராவணனிடம் உயிர் பிரியாமல் இருந்தது.

அப்போது ராமர் லட்சுமணனை பார்த்து லட்சுமணா ராவணன் அனைத்துக் கலைகளையும் அறிந்தவன் ராஜதந்திரம் மிக்கவன். நமக்கு அவனுடைய அரசியல் அனுபவம் மிகவும் பயனுள்ளதாயிருக்கும். நீ அவனிடம் போய்நான் கேட்டதாகக் கூறி அவனுடைய சிறந்த அறிவுரை களைப் பெற்று வா என்று கூறி அனுப்பினார்.

லட்சுமணன் பவ்யமாக ராவணனின் காலடி யில் நின்று இலங்கேஸ்வரா உன்னுடைய ஞானம் உன்னோடு அழிந்துவிடக்கூடாது. நீ எனக்கு உபதேசிப்பதன் மூலம் அதை இந்த உலகம் அறிந்து பயன் பெறும் எனவே எனக்கு உபதேசியுங்கள் என்று வேண்டி நின்றான்.

லட்சுமணனை சிரித்துக் கொண்டே வரவேற்ற ராவணன், ராமர் தன்னிடத்தில் வைத்திருக்கும் மதிப்பு அறிந்து மகிழ்வுடன் தன் அறிவுரைகளைச் சொன்னான்.

லட்சுமணா ஒரு காலத்தில் சர்வ வல்லமை படைத்தவனாக நான் இருந்தேன். நவக்கிரகங் களும் எமனும் இந்திரனும் கூட எனக்குக் கீழ்ப்படிந்தனர். அப்போது நான் எண்ணியது என்ன தெரியுமா?

நாட்டில் அனைவரும் சொர்க்கம் செல்ல வேண்டும். நரகம் யாருக்கும் இல்லையென உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஒரு பறக்கும் ஏணி அனைவரையும் ஏற்றிச் செல்ல எமனைக் கொண்டே உருவாக்கப்பட வேண்டும் என்பதே.

ஆனால் இந்த நல்ல எண்ணத்தைச் செயல் படுத்தாமல் தள்ளிப் போட்டேன். அதன் விளை வாகவே இன்று நான் அவதிப்பட்டேன்.

சூர்ப்பனகை வந்து சீதாதேவி அழகின் சிகரம். அவள் உனக்கு ஏற்றவள் என்று கூறியதும் உடனே அந்தச் செயலை தள்ளிப் போடாமல் புறப்பட்டேன். விளைவு அனைவருக்கும் நாசம்.

அதனால் நான் முக்கியமாகச் சொல்ல விரும் புவது.

1. நல்ல செயலை உடனடியாக செய்து முடி அது பலன் தரும்.




2. தீய செயலைத் தள்ளிப் போடு தள்ளிப் போடுவதால் அந்த தீய செயல் நடை பெறாமல் இருக்க வாய்ப்புண்டு.
3. உன் சாரதியிடமோ வாயிற்காப்போனிடமோ சகோதரனிடமோ பகை கொள்ளாதே உடனிருந்தே கொல்வார்கள்.
4. தொடர்ந்து நீ வெற்றிவாகை சூடினாலும் எப் போதும் வெல்வோம் என்று எண்ணாதே.
5. உன் குற்றங்களை சுட்டிக் காட்டும் நண் பனை நம்பு.
6. நான் அனுமனை சிறியவன் என்று எடை போட்டது போல் எதிரியை எப்போதும் எளியவன் என்று எடைபோட்டுவிடாதே.
7. வானின்நட்சத்திரங்களை வளைக்க முடியும் என்று நம்பாதே. அவை நம் வழிகாட்டிகள்.
8. பொறுமையைவிட மேலான தவமுமில்லை.
9. திருப்தியை விட மேலான இன்பமுமில்லை.
10. இரக்கத்தை விட உயர்ந்த அறமுமில்லை.
11. மன்னித்தலை விட ஆற்றல் மிக்க ஆயுத மில்லை என்று சொல்லி முடித்தான் ராவணன்.

லட்சுமணன் ராவணனை வணங்கி உபதேசங் களை பெற்றுக் கொண்டான்.

e-magazine
aanmeegamalar.com

# பிருந்தாவனப் பிரவேசத்திற்கு செல்லும் முன் ஶ்ரீராகவேந்தர் ஆற்றிய உரை



ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் உண்மையான புகைப்படம் நிஜாம்பாத்தில் உள்ள திப்புசுல்தான் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளது.

e-magazine

aanmeegamalar.com

1671 ஆம் ஆண்டு ராகவேதிர சுவாமிகள் பிருந்தாவனப் பிரவேசத்திற்கு முன் தன்பக்தர்களுக்காக மனம் நெகிழவைக்கும் ஒரு உரையை தந்தார்.

அவ்வுரையிலிருந்து சில பகுதிகள்:

1. சரியான வாழ்க்கை நடத்தையின்றி சரியான சிந்தனை வராது. நல்ல மற்றும் தகுதிக்குரிய மக்களுக்கு செய்யப்படும் உதவி/தர்மம் கடவுளின் பூஜைக்கு நிகராகும்.
2. சாஸ்த்திரத்தை பின்பற்றாமல் தங்களை கடவுள் என்று கூறிக்கொண்டு அதிசயங்களை செய்பவர்களிடமிருந்து விலகி இருங்கள். நானும் ஸ்ரீமத் ஆசாரியாரும் நிறைய அதிசயங்களை நிகழ்த்தியிருக்கிறோம்.
3. அவையெல்லாம் யோக சித்தியினாலும்கடவுளின் அருளினாலும் எங்களால் செய்ய முடிந்தது. அவற்றில் எந்த பொய்யோ பித்தலாட்டமோ இல்லை. அவ்வதிசயங்கள் கடவுளின் மகிமையையும் அவர் அருளால் ஒருவர் எப்பேற்பட்ட சக்திகளை அடைய முடியும் என்று பறைசாற்றவுமே செய்யப்பட்டது.
4. சரியான ஞானத்தை மிஞ்சிய எந்த அதிசயமோ அற்புதங்களோ கிடையாது சரியான ஞானம் இல்லாமல் செய்யப்படும் அற்புதங்கள் வெறும் சூனிய வித்தையே ஆகும். அவ்வித்தைகளை செய்பவருக்கோ அதை நம்புகிறவருக்கோ எந்த ஒரு நன்மையும் நேராது.



5. கடவுளின் மேல் நல்ல பக்தி இருத்தல்வேண்டும். இப்பக்தி குருட்டு நம்பிக்கை யாக இருக்கக்கூடாது'. கடவுளின்மேலான்மையை முழு மனதோடு ஏற்றுக் கொள்ளுதல் பக்தி ஆகும். குருட்டு நம்பிக் கை உண்மையான பக்தி ஆகாது. அது வெறும் முட்டாள்தனமே ஆகும்.
6. நமக்கு கடவுள் மேல் மற்றுமின்றி மற்ற இதர தேவதைகளிடமும் அவர்களின் தகுதிக்கேற்ப பக்தி இருத்தல் வேண்டும்.


இவ்வாறு உரையாற்றிய பிறகு ராகவேந்திரர் பிரணவ மந்திரத்தை ஜபித்துக்கொண்டு ஆழ்ந்த தியானத்தில் இறங்கினார்.

ஒரு தருவாயில் அவர் கையில் இருந்த ஜபமாலை நின்றது.

அந்த அறிகுறியைப் புரிந்துகொண்ட அவர் சீடர்கள் அவரை சுற்றி பிருந்தாவன சுவர் எழுப்பத் தொடங்கினார்கள்.

e-magazine
aanmeegamalar.com

# தசாஸ்வமேதத்தில் நீராடும் பக்தர் அஸ்வமேத யாகம் செய்த பலனைப் பெறுகிறார்



தசாஸ்வமேத தீர்த்தம்




சிவபெருமான் மந்திராச்சலத்தில் இருந்தார், காசியை திவோதாஸ் என்ற மிகவும் பக்தி கொண்ட மன்னன் ஆட்சி செய்தான். அவருடைய ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

எல்லா இடங்களிலும் செழிப்பு இருந்தது. தான் ஆட்சி செய்யும் வரை, தேவர்களும் பிற வானவர்களும் காசியை விட்டு விலகி இருக்க வேண்டும் என்றும், காசியில் எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது என்றும் பிரம்மதேவனுடன் புரிந்துணர்வு புரிந்தார்.

பிரம்மதேவன் அதற்கு ஒப்புக்கொண்டார். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் திவோதாஸ் மன்னன் ஒரு சிறந்த நிர்வாகி என்பதை நிரூபிக்க வேண்டும் மற்றும் காசியில் வசிக்கும் மற்றும் காசிக்கு வருகை தரும் மக்கள் அனைவரும் தங்கள் ஆன்மீக விஷயங்களில் நன்றாக நடத்தப்பட வேண்டும். மன்னன் சம்மதித்து அதற்கேற்ப சிறப்பான ஆட்சியை வழங்கினார்.

நீண்ட நாட்களாக காசியை விட்டு விலகியிருந்ததால் மிகவும் வருத்தமடைந்த சிவபெருமான் திவோதாஸ் மன்னன் ஏதாவது தவறு செய்ய விரும்பினார். அதன்படி, அறுபத்து நான்கு யோகினிகளையும், சூரிய பகவானையும் அடுத்தடுத்து அனுப்பினார். ஆனால் அவர்கள் பணியை நிறைவேற்றவில்லை. சிவபெருமான பின்னர் பிரம்ம தேவரை காசிக்கு அனுப்பினார். பிரம்மா தனது நிலையை சிறப்பாக முயற்சி செய்தார்,

ஆனால் திவோதாஸ் மன்னன் காசியை ஆட்சி செய்யும் திறமையான முறையில் அவர் மிகவும் திருப்தி அடைந்தார். மன்னனைச்

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





சோதிக்க, பிரம்மதேவன் அஸ்வமேத யாகம் செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். மேலும் மன்னன் தனது கட்டளையின்படி அனைத்தையும் பிரம்மாவிடம் கொடுத்தார். பிரம்ம தேவன் ஒன்றல்ல பத்து அஸ்வ மேத யாகங்களை செய்தார். யாகத்தின் பெரும் நெருப்பிலிருந்து எழுந்த புகை வானத்தை அடைந்து வெளிர் நில நிறத்தை எடுத்தது. இன்றுவரை, வானம் வெளிர் நீல "SKY BLUE" என்று மக்கள் குறிப்பிடும் அதே நிறத்தை பராமரிக்கிறது.

அருகில் உள்ள தீர்த்தம் தசாஸ்வமேத தீர்த்தம் என்று பெயர் பெற்றது. பிரம்மாவின் வருகைக்கு முன், இந்த தீர்த்தம் ருத்ர சரோவர் என்ற பெயரில் அறியப்பட்டது. இப்போது நீராடும் இடம் தசாஸ்வமேத காட் என்று அழைக்கப்படுகிறது.

பிரம்மா தசாஸ்வமேதேஸ்வரர் மற்றும் பிரம்மேஸ்வரர் என்று அழைக்கப்படும் சிவலிங்கங்களை நிறுவி சிவனை வழிபடத் தொடங்கினார்.

தசாஸ்வமேதத்தில் புனித நீராடும் ஒரு பக்தர்



e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

செய்யும் ஜபம் தானம். ஹோமம், வேதங்கள் ஓதுதல், பூஜை போன்ற அனைத்து ஆன்மீக காரியங்கள் அதிகபட்ச பலன்களைப் பெறும். தசாஸ்வமேதத்தில் செய்யப்படும் அன்னதானம் பல நன்மைகளைத் தரும் என்று காசி காண்டம் மேலும் கூறுகிறது.

தசாஸ்வமேதத்தில் புனித நீராடும் ஒரு பக்தர் செய்யும் ஜபம் தானம், ஹோமம், வேதங்கள் ஓதுதல், பூஜை போன்ற அனைத்து ஆன்மீக காரியங்கள் அதிகபட்ச பலன்களைப் பெறும். தசாஸ்வமேதத்தில் செய்யப்படும் அன்னதானம் பல நன்மைகளைத் தரும் என்று காசி காண்டம் மேலும் கூறுகிறது.

ஆஷாட மாதத்தில் அமாவாசைக்குப் பிறகு (ஜூன் 22 ஜூலை 20) முதல் நாளில் தசாஸ்வமேத தீர்த்தத்தில் புனித நீராடும் ஒரு பக்தர், அவனிடமிருந்து தனது பாவங்கள் முற்றிலும் நீங்குவதைக் காண்பார். தசாஸ்வமேதத்தில் நீராடி, தசாஸ்வமேதேஸ்வரரை வழிபடும் பக்தன். அறிந்தோ அறியாமலோ செய்த அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுவார்.

அமாவாசைக்குப் பிறகு முதல் நாள் தொடங்கி பதினைந்து நாட்கள் முழுவதும் பக்தர்கள் தசாஸ்வமேதத்தில் நீராட வேண்டும் என்று காசி காண்டம் பரிந்துரைத்துள்ளது. தசாஸ்வமேதத்தில் நீராடும் பக்தர் அஸ்வமேத யாகம் செய்த பலனைப் பெறுகிறார்.



தொலைகாட்சி மற்றும் பல்வேறு காணொளி களில் வாரணாசியின் நதி கட்டங்களில் நிறைய பழுப்பு நிற குடை போன்ற அமைப்புகளுடன் காட்டப்பட்டுள்ளது, அந்த இடம் தசாஸ்வமேத வாரணாசியில் ஒரு முக்கியமான செயல்பாடு நடக்கின்றது காட், தற்சமயம், கங்கா ஆர்த்தி. பண்டிதர்கள் குழு தினமும் மாலை சுமார் 7.15 மணிக்கு கங்கை நதிக்கு ஆரத்தி செய்கிறார்கள். முழு நிகழ்ச்சியும் சுமார் 45 நிமிடங்கள் நீடிக்கும் மற்றும் ஒரு பெரிய கூட்டம் இக்கண்கொள்ளா காட்சியை காண திரள்கிறது. இந்த ஆரத்தியை படகில் அமர்ந்து பார்ப்பது நல்லது. ஆரத்தி நேரத்தில், முழு பகுதியும் தெயவீக மற்றும் புனிதமான சூழலாக மாறும்.


– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்

தொலைபேசி எண்: 9839061178

# உதிக்கறப்போ சூரியன் பால சூரியனாதான் இருக்கும்

## சூரியன் உச்சியில ஏறினத்துக்கு அப்புறம் தான் அதோட உக்ரம் தெரியும்



மகாபெரியவா சன்யாசம் ஏத்துண்டு ஆசார்யாளா பீடம் ஏத்துண்டு பத்துப் பன்னிரண்டு வருஷத்துக்கு அப்புறம் நடந்த சம்பவம் இது. அப்போ ஆசார்யாளுக்கு சின்ன வயசு. அவரோட மகிமையெல்லாம் பலருக்கும் புரியாத காலகட்டம்.

மடத்துக்கு புதுசா வர்ற பக்தர்கள் பலர், ஆசார்யா இவ்வளவு சின்னவரா இருக்காரே இவர்கிட்டே நம்ம பிரச்னையைச் சொல்லலாமா? வேண்டாமா?ன்னு தயங்குவது உண்டு.


வேதம், புராணங்கள்ல சந்தேகம் கேட்க வர்றவாளா இருந்தா, இவருக்கு அதெல்லாம் தெரிஞ்சிருக்குமா? கேட்கலாமான்னு தயங்கி நிற்பா.

சிலர் இன்னும் ஒருபடி மேலே போய் இவர்கிட்டே எதுக்கு நம்ம குறையைச் சொல்லணம்னு அப்படியே திரும்பிப் போயிட லாம்னு நினைக் கறதும் உண்டு. ஆனா யாரா இருந்தாலும் ஒரே ஒருதரம் மகாபெரியவா முன்னால வந்து நின்னுட் டான்னா, அவாளோட எல்லா சந்தேகமும் போயிடும்.

உதிக்கறப்போ சூரியன் பால சூரியனாதான் இருக்கும். அது உச்சியில ஏறினத்துக்கு அப்புறம் தான் அதோட உக்ரம் தெரியும்கற மாதிரி, தொலை வுல இருந்து பார்க்கறச்சே, பாலகனா தெரியற பரமாசார்யா முன்னால வந்து நின்னாதான், அவர் பாலகன் இல்லை, பரமேஸ் வரன்னே புரியும்.

அந்த மாதிரியான கால கட்டத்துல ஒருநாள், மகா பெரியவாளை தரிசனம் பண்ணறதுக்காக நிறைய பேர் மடத்துக்கு வந் திருந்தா.

e-magazine
aanmeegamalar.com



அவாள்ல, வெளியூர்லேர்ந்து காஞ்சிபுரத்துக்குக்ஷேத்ராடனம் வந்த பக்தர் கூட்டம் ஒண்ணும் இருந்தது. காமாட்சியை தரிசனம் பண்ண வந்த அவாள்லாம். இங்கே ஆசார்யா இருக்கார்னு தெரிஞ்சதும் அவரை தரிசனம் செய்ய வந்திருந்தா!

வந்தவாள்ல பலர் ஆசார்யாளை தரிசனம் பண்ணறது இதுதான் முதல் தரம். சிலர் ஏற்கனவே வந்தவா. ஏற்கனவே வந்திருந்தவா, ஆசார்யாளோட பெருமையை வராதவாளுக்கு சொல்லிண்டு இருந்தா. அதையெல்லாம் கேட்டுண்டு,எல்லாரும் வரிசையாக வந்து மகா பெரியவாளை நமஸ்காரம் செஞ்சு அவர்கிட்டே ஆசிர்வாதம் வாங்கிண்டு புறப்பட்டுண்டு இருந்தா.

அப்போ அந்தக் கூட்டத்தோட வந்திருந்த ஒரு தம்பதி மட்டும் வரிசைலேர்ந்து பாதியிலயே திரும்பி வெளியில போய் நின்னுட்டா.

அவாகூட வந்தவா எல்லாரும் மகாபெரிய வாளை தரிசனம் பண்ணி பிரசாதம் வாங்கிண்டு வெளியில வந்ததும்,'ஆசார்யாளை நீங்க ஏன் தரிசனம் பண்ண வரலை?'ன்னு பலரும் அவா கிட்டே கேட்டா.

“இங்கே மடத்துல ஆசார்யா இருக்கார்னதும் அவர்கிட்டே எங்க பிரச்னை ஒண்ணைச் சொல்லி அதுக்குப் பரிகாரம் ஏதானும் இருக்கான்னு கேட் கலாம்னு நினைச்சுண்டுதான் வந்தோம். இங்கே வந்து பார்த்தா, அவர் ரொம்ப சின்னவரா இருக்கார். இவர்கிட்டே,எப்படி எங்க பிரச்னையைச் சொல்றது? அதுக்கு ஆலோசனை எப்படிக் கேட்கறது? இதெல் லாம் சரிவராதுன்னு தோணித்து. அதான் வெளி யில வந்துட்டோம்!” அவா சொல்லிண்டு இருந்த சமயத்துலயே ஆசார்யாளோட அணுக்கத் தொண்டர் அங்கே வந்தார்

“இங்கே தீராத வயத்துவலியால தவிக்கற ஒரு மாமி வந்திருக்காளாமே,அவா யாரு? அவாளை ஆசார்யா அழைச்சுண்டு வரச் சொன்னார்” அப்படின்னார்.

அதைக் கேட்டதுதான் தாமதம்,அப்படியே பதறிப்போனா அந்த தம்பதி.

அந்த மாமி கொஞ்சம் தயக்கத்தோட ‘எனக்குதான் வயத்துவலி.!’ என்று வார்த்தைகளை முடிக்காமல் இழுக்க.அந்த தொண்டர் அவசரமா அவாளை கூட்டிண்டு போனார்.

மகாபெரியவா முன்னாலபோய் நின்னா, அந்தத் தம்பதி.இவர் எப்படி என்னோட வயத்துவலியைத் தெரிஞ்சுண்டார்ங்கற மாதிரியான ஆச்சரியம் அந்த மாமி முகத்துல பட்டவர்த்தனமா தெரிஞ்சுது.

“என்ன அடிவயத்தைப் பிசையறாப்புல வலிக்கறதா? டாக்டர்களெல்லாம் அல்சர் ரொம்ப அதிகமாயிடுத்து, தீவிரமா சிகிச்சை பண்ணியாகணும்னு சொல்றாளா?” அவாகிட்டே கேட்டுண்டே சாத்துக்குடி பழம் ஒண்ணை எடுத்து கையில வைச்சு உருட்டிண்டு இருந்தார் மகாபெரியவா.

“ஆமாம் நேரத்துக்கு சாப்பிடாததால வயத்துல அமிலம் அரிச்சு புண்ணாயிடுத்தாம் .குணப்படுத்தறது ரொம்ப கஷ்டம்னு சொல்றா டாக்டர்கள்.! அடிக்கடி தாங்க முடியாம வலிக்கிறது” சொன்ன அந்த

e-magazine
aanmeegamalar.com

மாமியோட கண்ணுல இருந்து வலி தாங்காம ஜலம் வழியத் தொடங்கித்து.

தான் கையில் வைச்சு உருட்டிண்டு இருந்த சாத்துக்குடியை சட்டுனு அந்த மாமியோட ஆத்துக்காரர்கிட்டே தூக்கிப் போட்டார் மகா பெரியவா.”அதை உடனே உரிச்சுக் குடு..!” கட்டளை மாதிரி சொன்னார்.

ஏதோ ஒரு உத்வேகத்துல அவரும் அந்தப் பழத்தை உரிச்சு ஆத்துக்காரிக்குக்குடுத்தார். தாங்க முடியாத வயித்துவலியில தவிச்சுண்டு இருந்த அந்த மாமி, ஒவ்வொருசுளையா வாங்கி ஏதோகுழந்தை சாப்பிடறாப்புல சாப்பிட்டு முடிச்சா. இத்தனையும் ஒரு சில நிமிடத்துல நடந்துடுத்து.

அதுக்கு அப்புறம் நடந்துதான் பேரதிசயம்! அதுவரைக்கும் வலியால துடிச்சுண்டு இருந்த அந்த மாமி, இதுவரைக்கும் வலிச்சதெல்லாம் கனவா? நனவா?ங்கற மாதிரி ரொம்பவே சந்தோஷமா பேச ஆரம்பிச்சுட்டா.

“இதுவரைக்கும் என்னை வாட்டிண்டு இருந்த வலி போன இடம் தெரியலை. சாதாரணமா இந்த வலி வந்துட்டா ரெண்டு மூணு மணி நேரமாவது என்னை வாட்டி வதைச்சுடும்.

மருந்து எடுத்துண்டாலும் அது வேலைசெய்யற வரைக்கும் சகிச்சுண்டு இருக்கணும். ஆனா இப்போ ரொம்பவே ஆச்சரியமா எனக்கு வலி போன இடம் தெரியலை. ஆசார்யா தந்த பழத்தோட முதல் சுளையைத் தின்னதுமே என்னோட வலி குறைய ஆரம்பிச்சுடுத்து. முழுசா தின்னு முடிச்சதும் எனக்கா வலிச்சுதுங்கற மாதிரி பூரணமா நிவர்த்தி ஆயிடுத்து!” வார்த்தைகள் நெகிழ, கண்ணு கசிய சொன்னார் அந்த மாமி. நின்னுண்ட இருந்த அவர் அகத்துக் காரர் மாமி சொல்லி முடிச்ச மறுகணம் அப்படியே சாஷ்டாங்கமா ஆசார்யா திருவடியிலே விழுந்தார்.

“எங்களை மன்னிச்சுடுங்கோ! இவ்வளவு சின்னவரா இருக்கேளேன்னு நாங்க சந்தேகப் பட்டோம். ஆனா, நாங்க சொல்லாமலே என் ஆத்துக்காரியோட பிரச்னையைத் தெரிஞ்சுண்டு, அது போகறதுக்கு மருந்தாட்டம் ஒரு கனியைப் பிரசாதமாவும் தந்து எங்க கண்ணைத் திறந்துட்டேள்” தழுதழுப்பா சொன்னார்.

மௌனமா ஒரு புன்னகையை மட்டும் பதிலாக்கி அந்தப் பெண்மணிகிட்டே கொஞ்சம் குங்குமப் பிரசாதத்தைக் குடுத்து ஆசிர்வதிச்சார் மகாபெரியவா.

அந்தப் பெண்மணிக்கு தீராத வயத்துவலின்னு ஆசார்யாளுக்கு எப்படித் தெரிஞ்சுதுங்கறது அதிசயம்னா, அதைவிட பேரதிசயம் ஒரே ஒரு சாத்துக்குடியைத் தந்து அவாளோட வியாதியைப் போக்கினது. இதெல்லாம் சாட்சாத் அந்தப் பரமேஸ்ளரியவரனோட அம்சமான மகாபெரியவாளோட லீலை இல்லாம வேறு என்ன?

# நவம்பர் 16-ல் சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடைதிறப்பு




சபரிமலை அய்யப்பன் கோவிலில் நடப்பு ஆண்டு மண்டல மகரவிளக்கு சீசனை முன்னிட்டு கோவில் நிர்வாகம் சார்பில் அட்டவணை வெளயிடப்பட்டு உள்ளது. அதன்படி வருகிற 16ந் தேதி மாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்படும். 17ந் தேதி முதல் டிசம்பர் 27ந் தேதி வரை 41 நாட்கள் மண்டல பூஜை நடைபெறும். 27ந் தேதி இரவு நடை அடைக்கப்படும்.

மீண்டும் மகரவிளக்கு பூஜைக்காக டிசம்பர் மாதம் 30ந் தேதி மாலை 5 மணிக்கு நடை திறக்கப்படும். 31ந் தேதி முதல் அடுத்த ஆண்டு (2024) ஜனவரி 15ந் தேதி வரை மகரவிளக்கு பூஜைகள் நடைபெறும். அன்று மாலை 6.30 மணிக்கு மகர ஜோதி தரிசனம் நடைபெறும்.



தொடர்ந்து 19ந் தேதி வரை பூஜைகள் நடைபெறும். 20ந் தேதி காலையில் பந்தளம் ராஜ குடும்ப பிரதிநிதி தரிசனத்திற்கு பின்னர் கோவில் நடை அடைக்கப்படும். அன்றுடன் நடப்பு மண்டல மகரவிளக்கு சீசன் நிறைவுபெறும்.

e-magazine
aanmeegamalar.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
## சந்தா

UPI மற்றும் வங்கி
வாயிலாகவும்
சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மீக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# புத்தன் நடந்த புனித வழி...!





வர்த்தமான மகாவீரர் கண்டறிந்த ஜைன சமயம் இந்துமதத்தின் ஒரு அங்கம் இந்துமத வேதங்களும் உபநிஷதங்களும் ராமாயணம் மகா பாரதம் போன்ற இதிகாசங்களும் பகவத்கீதை வேதாந்த சூத்திரம் போன்ற புனித நூல்களும் வலியுறுத்து கின்ற அஹிம்சா தத்துவத்தை சுவி கரித்து கொண்டு வர்தமானரும் அவருக்கு பின்வந்த பல்வேறு தீர்தங்கர்களும் ஜைன மதத்தை விரிவாக்கம் செய்தனர் என்று நான் எழுதியிருந்ததை படித்து விட்டு எனது சில ஜைன நண்பர்கள் நேரடியாகவும் வேறு சில ஜைன நண்பர்கள் தொலைபேசி வழியாகவும் உங்கள் கருத்தை எங்களால் ஏற்றுகொள்ள முடியாது காரணம் ஜைன மதம் என்பது மகாவீரரின் சொந்த உருவாக்கம் எனவே நீங்கள் உங்கள் எண்ணத்தை மாற்றிகொள்ளுங்கள் என்று அறிவுரை சொன்னார்கள்.

அவர்கள் சொல்லுவது அவர்களுக்கு சரி நான் சொல்வது எனக்கு சரி எனவே எனது கருத்தை மாற்றி கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று பதில் சொல்வது தர்க்கப்படி சரியாக இருக்கலாம். ஆனால் அறிவார்ந்து யோசிக்கும் போது நான் ஏன் அப்படி கருதுகிறேன் என்று விளக்கம் கூறுவதும் அந்த விளக்கத்தை அவர்கள் கேட்ட பிறகு ஏற்றார்களா இல்லையா என்பதை வைத்து இன்னும் ஆழமாக ஆய்வு செய்வதுமே சரியாக இருக்கும் ஆனால் நம்மில் பலர் இதை போல யோசிப்பது கிடையாது நமது

கருத்துக்கு ஒரு மாற்று கருத்து வந்தவுடன் மாற்றுகருத்து சொன்னவரை வசைபாடுவதும் அவரை விரோதியாக பார்ப்பதுமே வழக்கமாக இருக்கிறது. இந்த பழக்கத்தால் தான் நாட்டில் பல விஷயங்களுக்காக குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் உருவாகுகின்றன.

இந்தியாவிற்கு வெளியே உருவான மதங்கள் அனைத்திற்கும் சொராசிரியம் என்ற மதம் எப்படி மூல கருவாக அமைந்துள்ளதோ அதே போலவே இந்தியாவில் தோன்றிய அனைத்து மதங்களுக்கும் நான்கு வேதங்களே மூலமாகவும் முதலாகவும் அமைந்துள்ளது இந்து சமையத்தின் நேரடி உட்பிரிவுகளான காணாபத்யம் துவங்கி சைவ சித்தாந்தம் வரையில் வேதங்களை தங்களது கருத்தாக்கங்களுக்கு அடிப்படையாகவும் அஸ்திவாரமாகவும் எடுத்து கொள்கின்றன.

அதாவது சுருங்க சொல்வது என்றால் அவைகள் வேதங்களை ஏன்? எதற்கு? என்ற கேள்விகளே கேட்காமல் அப்படியே ஏற்றுகொள்கின்றன. அதே போலவே இந்து சமையத்தின் வெளிபிரிவுகளான ஜைனம் துவங்கி சீக்கியம் வரையில் வேத கருத்துக்களை எதிர்த்து நின்று அதே நேரம் வேதங்களுக்கு மாற்று விளக்கங்கள் சொல்லி வளருகின்றன. அதாவது இந்திய மதங்கள் அனைத்துமே ஒன்று வேதத்தை ஆதரித்து அல்லது எதிர்த்து உருவானவைகள் தான். ஆக ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் மூல காரணம் வேதங்களே ஆகும்.



வர்த்தமான மாகா வீரர் ஹிந்துமதத்தில் உள்ள வீணான சடங்கு ஆச்சாரங்களை எதிர்த்தார். யாகங்களை எதிர்த்தார். யாகங்களில் பலியிடப்படும் உயிர் வதையை எதிர்த்தார்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இவைகளை ஹிந்து வேதங்கள் வலியிருத்துகின்றன என்றால் அவைகளும் தேவையில்லை என்று வேதங்களையும் எதிர்த்தார்.

இதை நான் மறுக்கவில்லை இதை அறியாதவனும் இல்லை இவைகளை எல்லாம் எதிர்த்த மகாவீரர் ஹிந்து மதம் சொன்ன ஆத்மாக்களை உண்டென்றுஏற்றுகொண்டார். தேவ,தேவிகள் இருப்பதை ஒத்து கொண்டார் நல்லது செய்தால் நல்லது விளையும் தீயது செய்தால் தீமை விளையும் என்ற கர்ம வினை பலனையும் ஏற்றுகொண்டார். இவை களை வைத்து பார்க்கும் போது அவர் இந்துமதத்தில் ஏற்காதது சில ஏற்றது பல என்ற முடிவிற்கு என்னால் வர முடிந்தது. அதையே ஹிந்துமதத்தின் ஒரு அங்கமே ஜைன மதம் என்று எழுதினேன் அதில் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை மற்றவர்கள் அப்படி நினைத்தால் அது அவர்களது சிந்தனை சுகந்திரம்.

ஜைன மதத்தை இந்துமத அங்கமென்று சொல்வதில் கருத்து பேதம் உள்ளவர்கள்

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com



கூட பௌத்த மதம் இந்துமதத்தின் இன்னொரு வளர்ச்சி என்பதை ஒத்துகொள்வார்கள். இந்து மதத்தில் உள்ள அத்வைத தத்துவத்தை நன்கு அறிந்தவர்கள் பௌத்த தத்துவம் உபநிஷதங்களில் இருந்து உருவானது என்பதை ஏற்றுகொள்வார்கள். காரணம் அத்வைதம் பிரபஞ்சம் அனைத்துமே பிரம்மத்தின் தோற்றம் என்கிறது. புத்த தத்துவம் பிரம்மம் என்ற வார்த்தைகளுக்கு பதிலாக சூன்யம் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறது. வித்தியாசம் இவ்வளவே தவிர வேறு ஒன்றுமில்லை.

இறைவனாகிய மகாவிஷ்ணுவின்அவதாரங்களில் ஒன்றே புத்த அவதாரம் என்று பல அறிஞர்கள் சொல்கிறார்கள். இந்துமத புராணங்களில் சிலவும் இந்தகருத்தை ஆமோதிக்கின்றன.

கௌதம புத்தர் கூட துன்பத்திற்கான மூலகாரணம் ஆசையே என்பதைதான்புதிதாக கண்டறியவில்லை தனக்கு முன்னால் பல ஞானிகள் தங்களது அனுபவத்தால் கண்டறிந்தவைகளை நானும் உணர்ந்து உபதேசிக்கிறேன். என்று சொல்கிறார் ஆனால் புத்த மதத்தை தனி ஒரு மதமாக நிலைநிறுத்த வேண்டுமென்ற ஆசைகொண்ட பல அறிஞர்கள் புத்த மதமானது ஹிந்துமதத்திற்கு மாறுபட்டது விரோதமானது துளி கூட சம்மந்தமில்லாதது என்று ஆயிரகணக்கான ஆண்டுகளாக வாதிட்டு வருகிறார்கள். ஆனாலும் கூட பௌத்த தத்துவ மரபில் உபநிசதங்களின் கருத்துக்கள் பல இடங்களில் பளிச்சிடுவதை யாரும் மறுக்க இயலாது.




புத்த மதம் இந்து மதத்திற்கு முற்றிலும் வேறுபட்டது என்பதை காட்டபுத்தர் கடவுளைபற்றிஉபதேசிக்கவில்லை கடவுள் இருப்பதாக எங்கும் சொல்லவில்லை என்று வாதிடுகிறார்கள். அவர்களின் கருத்துக்களை மட்டுமே கேட்கும் பலருக்கு இதனால் குழப்பம் வருகிறது. புத்த மத கருத்துக்களை பற்றிய குழப்பங்கள் இருப்பது ஆச்சரியம் அல்ல காரணம் அந்த தத்துவம் சாதாரணமாக புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு மிகவும் கடினமானது. புத்தருக்கு போதி மரத்தடியில் உதயமான ஞானம் என்ன? அவர் நீண்ட நெடுங்கால தவத்தின் விளைவாக கண்ட முடிவுகள் என்ன? இன்று பௌத்த தத்துவங்கள் என்று சொல்லபடுபவைகள் அனைத்துமே புத்தரால் சொல்லப்பட்டது தானா? அல்லது அவருக்கு பின்னால் உருவாக்கம் செய்யபட்டதா? அப்படி என்றால் புத்தரின் சொந்த கருத்து எது? மற்றவர்கள் உருவாக்கிய கருத்து எது? என்று ஆயிரம் கேள்விகள் இன்னும் பதில் இல்லாமல் இருக்கிறது. அவைகளுக்கான விளக் கங்களை பெற்ற பிறகே புத்தர் கடவுளை ஒத்துகொண்டாரா? இல்லையா? என்ற முடிவற்கு நம்மால் வரமுடியும். காரணம் புத்தர் நம்மை போன்று சாதாரண அறிவு படைத்த மனிதர் அல்ல அவர் நிறைவான ஞானி.

ஒரு பெரிய மலை இருக்கிறது அந்த மலையின் உச்சியில் ஒருவன் இருக்கிறான் மலையடிவாரத்தில் வேறொரு மனிதன் இருக்கிறான் உச்சியில் இருக்கும் மனிதன் தூரத்தில் ஒரு வாகனம் வருவதாக சொல்கிறான் அடிவாரத்தில் இருக்கிறவன் கண்ணில் வாகனம் எதுவும் தென்படவில்லை எனவே அவன் எதுவும் வரவில்லை என்று மேலே இருப்பவனின்



aanmeegamalar.com

கருத்தை மறுதலிக்கிறான். சிறிது நேரம் கழித்து மலையடி வாரத்தில் அருகில் வாகனம் வருகிறது கிழே இருப்பவன் இப்போது தான் வண்டி வருகிறது இது தான் உண்மை என்கிறான் வண்டி அவனை விட்டு நகர்ந்ததும் அது போய்விட்டது என்று சொல்கிறான். ஆனால் மேலே இருப்பவனோ வாகனம் இன்னும் போகவில்லை சாலையிலேயே தென்படுகிறது என்று சொல்கிறான் கிழே உள்ளவன் மீண்டும் அவன் பேச்சை நம்ப மறுக்கிறான்.

முக்காலத்தை உணர்ந்த ஞானிக்கும் நமக்குள் உள்ள வித்தியாசம் இப்படி பட்டது தான் புத்தர் போன்ற ஞானிகள் மலை உச்சியில் இருப்பதை போன்றவர்கள் நம்மை போன்ற சாதாரண ஜீவன்கள் அடிவாரத்தில் கிடப்பவர்கள். மேலே இருப்பவர்களால் முக்காலத்தையும் உணர முடியும் நம்மால் நிகழ்காலத்தை மட்டுமே காண முடியும். நமக்கு நிகழ்காலம் மட்டுமே சத்திய மானது அதை மட்டுமே வைத்து கொண்டு எல்லாவற்றையும் அளவிடுகிறோம் கடவுள் என்பதும் முக்காலத்திலும் இருக்க கூடிய சக்தியே ஆகும். மூன்று காலத்தையும் உணர்ந்த பிறகே கடவுளை உணர முடியும். இதை மனதில் வைத்தே புத்தர் கடவுள் பற்றிய விஷயத்திற்கு மௌனம் சாதித்திருக்கலாம் அதை உணராத அற்ப ஜீவிகளான நாம் புத்தர் கடவுள் இல்லை என்று தான் சொன்னார் என்று வறட்டு வாதம் செய்துகொண்டிருக்கிறோம்

புத்தர் தமது சொந்த உபதேசங்களில் ஹிந்துமத கருத்துகளையே பெருவாரியாக பேசுகிறார். மிக குறிப்பாக சொல்வது என்றால் இந்துமதத்தின் ஆதர கொள்கை மறுபிறப்பு என்பது கர்மாவின் ஆளுகையும் இந்து மதத்தால் உலகுக்கு சொல்லப்பட்டது தான் இந்த இரண்டு முக்கிய கோட்பாடுகளை புத்தர் மறுப்பேதும் சொல்லாமல் அப்படியே ஏற்றுக்கொண்டு உபதேசிக்கிறார். இன்னும் ஒருபடி சொல்வது என்றால் புத்தர் கூட பல பிறவிகளை எடுத்தவர் ஆவார். புத்த மத ஆதர நூல்கள் பல இதற்கு சான்றுகளாக இருக்கின்றன.

பௌத்த மதத்தை உருவாக்கியது கௌதம புத்தர் என்று நம்மில் பலர் நம்பிவருகிறோம்ஏன் புத்த மதத்தை பற்றிய முழுவிபரங்கள் தெரி யாத பல பௌத்தவர்கள் கூட அப்படிதான் சொல்கிறார்கள். ஆனால் புத்த மத நூல்கள்அப்படி சொல்லவில்லை புத்த ருக்கு முன் பல புத்தர்கள் இருந்தார்கள் அவர்க ளின் எண்ணிக்கை இருப்பத்தி நான்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு புத்தர்கள் வந்தார்கள் அவர்கள் உடலால் வேறுபட்டவர்களாக இருந்தாலும் ஆத்மாவால் ஒன்று பட்டவர்கள் ஒன்றானவர்கள் என்று சொல்கின்றன. இதை

இறந்த காலத் தெண்ணில் புத்தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்து

என்று தமிழில் உள்ள மணிமேகலை காப்பியம் அழகாக கூறுவதை இங்கு நினைவு படுத்த வேண்டும். அதாவது இறந்த காலத்தில் எண்ணில் அடங்காத புத்தர்கள் இருந்தார்கள் என்பது இந்தபாடலில் பொருளாகும் எனவே புத்தருக்கு முந்திய புத்தர்கள் பலர் புத்த மத கருத்துக்கள் வடிவாக்கம் பெற உழைத்திருக்கிறார்கள் அவர் களின் கருத்துக்கள் எதுவும் இன்று நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை என்றாலும் அவர்களில் பலர் உபநிஷத் காலத்து ஞானிகள் என்பதை மறுக்க இயலாது. எனவே புத்த மதத்திற்கு மூத்த மதமான ஜைன மதம் எப்படி இந்துமதம் என்ற மகாவிருஷத்தின் ஒரு கிளையோ அதே போலவே பௌத்த மதமும் இந்து மதத்தின் ஒரு பிரிவாகும், இனி அந்த மதத்தின் தத்துவத்தை சிறிது ஆராய்வோம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434


ஆன்மிகமலர்
மெயில் புக்
இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்

# ஆன்மீக வழியில் அமைதி



e-magazine
aanmeegamalar.com

அனைத்து ஜீவராசிகளிடமும் இறைவன் பிரம்ம ஸ்ரூபமாக இருக்கிறான் என்ற நம்பிக்கையுடன் ஜீவன்கள் ஞானநிலையை அடைவது விதேக முக்திநிலை ஆகும். அதாவது ஞானநிலையை அடைந்த ஜீவன்கள் உலகில் மீண்டும் பிறவாமையாகும். அதாவது விதேக முக்தி அடைந்த ஜீவன்கள் உலகில் மீண்டும் பிறப்பதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது. பூர்ண ஞானம் வந்தவுடன் அனைத்துக் கர்ம பந்தங்களிலிருந்து விடுதலை முக்திநிலை ஜீவர்களுக்கு கிடைக்கிறது.

கர்மங்கள் எத்தனைவிதமாக உள்ளன என்று சிந்தித்துப் பார்த்தால் மூன்று வகைக் கர்மங்கள் இருக்கின்றன. அவற்றை எவ்வாறு ஞானத்தால் நீக்குவது அல்லது அகற்றுவது என்று சிந்தித்துப் பார்த்தால் இந்த கர்ம தத்துவம் நமக்கு சோம்பலையும் சோர்வையும் உறுதியின்மையும் பொறுப்பற்ற தன்மையையும் தருகிறது. பொதுவாக கர்மா தத்துவத்தை நாம் கஷ்டங்கள் வரும்போது இதுதான் நமது விதி இதனை நாம் மாற்றமுடியாது என்று பொறுப்பினை தட்டிக்கழித்து விடுகிறோம். ஆனால் நமது இந்த கர்மா தத்துவங்கள்தான் ஒருவகையில் பூர்ண ஞானத்திற்கு உதவியாக இருக்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

நம்மிடம் இருந்து உடலளவில் மனதளவில் உருவாகும் ஒவ்வொரு செயலுக்கும், எண்ணத்துக்கும் ஒரு விளைவு உறுதியாக இருக்கும். இது ஒரு அடிப்படையான உலக நியதியாகும். அவை நன்மை தரக்கூடிய விளைவாகவோ தீமை தரக்கூடிய விளைவாகவோ இருக்கலாம்.

73


நமது செயல்களின் எண்ணங்களின் விளைவுகள் மனதளவில்கூட இருக்கலாம். அவை உடலளவில்கூட இருக்கலாம். பொதுவாக ஜீவர்களுக்கு ஏற்படக்கூடிய கர்ம பலன்களின்

விளைவுகளை இரண்டாக பிரிக்கலாம். ஒன்று நமது கண்ணுக்குத் தெரியும் கர்ம பலன்கள். அதனை திருஷ்டப்பலன் என்று சாஸ்திரம் கூறுகிறது. மற்றொன்று நம் கண்ணுக்குத் தெரியாத கர்ம பலன்கள். அதனை அதிர்ஷ்டப் பலன் என்று சாஸ்திரம் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக நாம் பசியுடன் இருக்கும் ஒரு ஏழைக்கு நம்மிடமிருந்து உணவை எடுத்துக் கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாம் கொடுக்கும் செயலில் என்ன விளைவு ஏற்பட்டுள்ளது என்றால், நம்மிடம் வைத்திருக்கும் உணவில் ஓரளவு குறைந்துள்ளது. அந்த உணவை பெற்றுக்கொண்ட அந்த ஏழைக்கு பசியாறுவதற்குத் தேவையான உணவு கிடைத்து விடுகிறது. இது நம் கண்ணுக்குத் தெரியும் கர்ம பலனாகும். அதாவது அது திருஷ்டப்பலன் என்று கூறப்படுகிறது.

அதிர்ஷ்டப் பலனை சாஸ்திரம் புண்ணிய கர்ம பலன்கள், பாவகர்மப் பலன்கள் என்று இரண்டாகப் பிரிக்கிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் மற்றவரின் பணத்தை திருடி விட்டார் என்று வைத்துக் கொள்வோம். இதனை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் பணத்தை திருடியதால் திருடியவனுக்கு பணம் கிடைத்து விடுகிறது. ஆனால் அவனுக்கு பணம் கிடைப்பதோடு அடுத்தவனுடைய பணத்தைத் திருடியதால் கர்ம பாவப்பலனும் அவனை அறியாமல் அவனிடம் வந்து சேர்ந்து விடுகிறது. அந்த திருடனிடம் பணத்தை இழந்தவர் உடலளவில் மனதளவில் துயரம் அடைந்தாலும் அவர் தன்னிடம் உள்ள பாவத்தை அதாவது அவருடைய கர்ம பாவப்பலனை அவரையும் அறியாமல் இதன் மூலம் குறைத்துக் கொள்கிறார் என்று சாஸ்திரம் கூறப்படுகிறது.

ஜீவன்களின் பாவம் புண்ணியக் கர்ம பலன்கள் எதன் அடிப்படையில் செயல்படுகிறது. ஒரு மனிதன் நேர்வழியில் ஈட்டிய பணத்தைக்கொண்டு உலகில் நல்லவையாக கருதப்படும் தானதர்மங்கள் செய்யும் செயல்பாடுகள் மூலம் புண்ணியப் பலன்களை அவனுக்குக் கொடுக்கும். அதற்கு மாறாக மனிதன் குறுக்குவழியில் ஈட்டிய செல்வத்தைக்கொண்டு தானதர்மங்கள் செய்தாலும் அதன் விளைவு அவனுக்கு கர்ம பாவப்பலன்களைத்தான் கொடுக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவன் மக்களை ஏமாற்றி



குறுக்குவழியில் பொருளை ஈட்டுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் குறுக்குவழியில் தான் பொருளை சேர்த்துக்கொண்டு இருக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்தாலும், அதனைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை.

அவ்வாறு அவன் குறுக்குவழியில் ஈட்டிய பணத்தின் ஒரு பகுதியை கோவில் உண்டியலில் போடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவ்வாறு செலுத்தும்போது தான் குறுக்குவழியில் ஈட்டிய பணம் என்று எண்ணாமல் தான் ஈட்டிய பணம்தான் எண்ணிக்கொண்டு, இதன்மூலம் தனக்கு புண்ணிய பலன்கள் கிடைக்கும் என்ற எண்ணத்தில் உண்டியலில் செலுத்துகிறான். ஆனால் அவன் குறுக்கு வழியில் மக்களை ஏமாற்றி ஈட்டிய பொருளை கோவில் உண்டியலில் செலுத்தியது அவனுக்கு அவன் மனதுக்கு நல்லதாகத் தெரிந்தாலும், அவன் பாவத்தின் கர்ம பலனை அவனையும் அறியாமல் அடைகிறான்.

மற்றொருவன் நேர்மையான வழியில் கஷ்டப்பட்டு ஈட்டிய பொருளை ஒரு பகுதியை மனநிறைவோடு கோவில்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

e-magazine
aanmeegamalar.com

உண்டியலில் செலுத்துகிறார். அவ்வாறு அவர் செலுத்தும்போது அவரையும் அறியாமல் புண்ணிய கர்ம பலன் அவரை வந்து அடைகிறது. ஒருவர் நேர்வழியிலும், மற்றொருவர் குறுக்குவழியிலும் ஈட்டிய பணத்தை இருவரும் கோவில் உண்டியலில் பணத்தை மகிழ்ச்சியுடன் செலுத்துகிறார்கள். அது ஒருவனுக்கு பாவ கர்ம பலனாகவும் மற்றொருவருக்கு புண்ணிய கர்ம பலனாகவும் இருக்கிறது. இதிலிருந்து பாவ புண்ணிய கர்ம பலன்கள் அவன் செய்த செயல்பாடுகள் மூலம் அடைகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து ஒரு மனிதன் பணம் எந்தவழியில் சம்பாதித்து தானதர்மங்கள் செய்கிறார் என்ற முறையில் பாவ புண்ணியப் பலன்கள் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வுலகில் புண்ணிய கர்ம பலனை அடைந்தவர்கள் மன அமைதியுடன் வாழ்கிறார்கள்.

மனிதனுடைய எண்ணங்கள், செயல்பாடுகளின் அடிப்படையில் கர்ம பலன்களை அவன் அனுபவிக்கிறான் என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு மேலதிகாரி லஞ்சம் பெற்றுக்கொண்டு சட்டத்திற்குப் புறம்பாக ஒருவருக்கு பணி நியமன ஆணை வழங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு செயல்படுபவர் அவரையும் அறியாமல் அவர் பாவ கர்ம பலனை சேர்த்துக் கொள்கிறார். மற்றொரு மேலதிகாரி தகுதியின் அடிப்படையில் எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் ஒருவருக்கு பணி நியமன ஆணை வழங்குகிறார். அவ்வாறு செயல் படும் அந்த மேலதிகாரி அவரையும் அறியாமல் புண்ணிய கர்ம பலன்களை அடைகிறார். மனிதர்களுடைய வாக்கு, எண்ணங்கள், செயல்பாடுகள் இவற்றின் மூலம் பாவ புண்ணிய கர்ம பலன்கள் நிர்ணயிக்கப்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. நாம் நினைப்போதுபோல் பாவ புண்ணிய கர்ம பலன்கள் இறைவனால் நிர்ணயிக்கப்படுவதில்லை. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது என்று பேச்சு வழக்கில் கூறுவதைக் நாம் கேட்டு இருக்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு சிறுகதை. ஒரு கோவில் மண்டப வாசலில் இரண்டு வழிப்போக்கர்கள் அமர்ந்து கொண்டிருந்தனர். இரவு நேரம். பெருத்த மழை பெய்து கொண்டிருக்கிறது. அப்போது அங்கே மற்றொருவரும் வந்து சேர்ந்தார். அவர் ''நானும் இரவு இங்கே உங்களுடன் தங்கலாமா?'' என்று கேட்டார். இருவரும் அதற்கென்ன? தாராளமாய் தங்குங்கள் என்றார்கள். சிறிது நேரம் கழித்து புதிதாக வந்து சேர்ந்தவர் ''எனக்கு சாப்பிட ஏதாவது கிடைக்குமா? '' என்று கேட்டார்.

வழிபோக்கர்களில் இருவரில் ஒருவர் ''என்னிடம் ஐந்து ரொட்டிகள் இருக்கின்றது'' என்றார். மற்றொரு வழிப்போக்கர் ''என்னிடம் மூன்று ரொட்டிகள் இருக்கின்றது'' என்றார். அவர்கள் இருவரிடமும் சேர்ந்து மொத்தம் எட்டு ரொட்டிகள் இருந்தன. இதனை இரு வழிபோக்கர்கள் நாம் எப்படி மூவரும் சம மாய் பிரித்துக்கொள்ள முடியும்? என்றனர். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த மூன்றாம் நபர் ''இதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன்'' என்றார்.

''நீங்கள் உங்கள் இருவரிடம் உள்ள ரொட்டி களை, ஒவ்வொரு ரொட்டியையும் மூன்று துண்டுகளாக போடுங்கள். இப்பொழுது இருபத்து நான்கு ரொட்டித்துண்டுகள் கிடைக்கும். நாம் மூன்றுபேரும் ஆளுக்கு எட்டு துண்டுகள் வீதம் எடுத்து கொள்ளலாம் என்று யோசனை கூறினார். இது சரியான யோசனை என்று இரு வழிப்போக்கர்கள் ஒப்புக்கொண்டு அப்படியே செய்தனர்.




ஒவ்வொருவரும் எட்டு துண்டுகள் வீதம் ரொட்டிகளை சாப்பிட்டுவிட்டு மூவரும் உறங்கினார்கள். காலையில் மழையும் நின்றது. மூன்றாவதாய் வந்து சேர்ந்தவர் கிளம்பும்போது ''உங்கள் உதவிக்கு மிக்க நன்றி'' என்று சொல்லி அவரிடமுள்ள எட்டு தங்கக் காசுகளைக் கொடுத்து ''நீங்கள் உங்களுக்குள் பிரித்து கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு விடை பெற்றார்.

மூன்று ரொட்டிகளை கொடுத்தவர் அந்த தங்கக் காசுகளை சமமாகப்பிரித்து ஆளுக்கு நான்கு தங்கக் காசுகள் வீதம் எடுத்துக்கொள்ளலாம் என்றார். மற்றொருவர் இதற்கு சம்மதிக்கவில்லை. ''மூன்று ரொட்டிகள் கொடுத்த உனக்கு மூன்று தங்கக்

e-magazine
aanmeegamalar.com





காசுகள். ஐந்து ரொட்டிகள் கொடுத்த எனக்கு ஐந்து தங்கக் காசுகளா?'' என்று வாதிட்டார்.

மூன்று ரொட்டிகள் கொடுத்தவர் ''என்னிடம் மூன்றே ரொட்டிகள் இருந்தபோதும் நான் பங்கிட சம்மதித்தேன். நிறைய இருப்பவன் கொடுப்பது ஒன்றும் பெரிய செயல் ஆகாது. அதனால் என்னோட செய்கையே மிகவும் பாராட்ட தக்கது என்றாலும் பரவாயில்லை. இருந்தபோதிலும் காசுகளை நாம் சமமாகவே பங்கிடுவோம்'' என்று வாதிட்டார்.

இருவருக்கும் தங்கக் காசுகளைப் பிரிப்பதில் சுமுகமான முடிவு எட்டாததால் விஷயம் அரசனின் சபைக்கு சென்றது. அரசனுக்கு யார் சொல்வது சரி என்று புரிபடவில்லை. அரசன் நாளை தீர்ப்பு சொல்வதாக அறிவித்து அரண்மனைக்கு சென்றான். இரவு முழுவதும் இதே சிந்தனை. அவன் வெகு நேரம் கழித்தே தூங்க முடிந்தது. கனவில் கடவுள் காட்சி அளித்து சொன்ன தீர்ப்பும் அதற்கு அவர் அளித்த விளக்கமும் மன்னரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

மறுநாள் சபை கூடியது. மன்னன் இருவரையும் அழைத்தான். மூன்று ரொட்டிகளை கொடுத்தவனுக்கு ஒரு தங்கக் காசும் ஐந்து ரொட்டி கொடுத்தவருக்கு ஏழு தங்கக் காசுகளும் கொடுத்தார்.

ஒரு காசு வழங்கப்பட்டவர் ''மன்னா ... இது அநியாயம். அவரே எனக்கு மூன்று காசுகள் கொடுத்தார்''.

அரசர் அவனுக்கு விளக்கமாகச் சொன்னார். நீ உன்னிடமிருந்த மூன்று ரொட்டிகளை பிரித்துக் கொடுத்தது ஒன்பது துண்டுகள். அதிலும் நீ சாப்பிடும்போது எட்டு துண்டுகள் உன்னிடமே வந்து விட்டது. மற்றொருவன் தன்னிடம் உள்ள ஐந்து ரொட்டிகளைப் பிரித்துக் கொடுத்தது பதினைந்து துண்டுகள்.

ஆனால் அவனுக்கு சாப்பிடக் கிடைத்தது உன்னைப்போல் எட்டுத்துண்டுகள்தான் கிடைத்தது. சிந்தித்துப் பார்த்தால் நீ தருமம் செய்தது ஒரு துண்டு ரொட்டி. அதற்கு ஒரு காசே அதிகம் என்றார். ஆனால் அவன் எட்டுத் துண்டு ரொட்டி சாப்பிட்டதுபோக மீதம் தர்மம் செய்தது ஏழு துண்டு ரொட்டிகள் ஆகும்'' என்று மன்னன் விளக்கம் கொடுத்தான்.

நம்மைப் படைத்தக் கடவுளின் கணக்கு இதேபோன்றுதான் இவ்வளவு துல்லியமாக இருக்கும். இழந்ததை எல்லாம் தருவது அல்ல அவன் கணக்கு. எது உனக்கு புண்ணியம் சேர்க்குமோ அதுதான் உனக்கு என்பது இறைவன் கணக்கு! ஏனென்றால் அவனது கணக்கு ஏட்டு கணக்கு அல்ல. தர்மத்தின் கணக்கு! இப்படித்தான் மனிதர்களின் பாவ புண்ணிய கர்ம பலன்கள் இறைவனால் நிர்ணயிக்கப்படுகிறது. ..

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

கட்டாய சந்தா இல்லை!
சப்ஸ்கிரைப் இல்லை!!
மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 175 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்





# நொய்டா கோவில்களில் நவராத்திரி கொண்டாட்டம்

e-magazine
aanmeegamalar.com

வேத மந்திரம் முழங்க , பல்வேறு பூஜைகள் மற்றும் ஹோமங்களுக்கு மத்தியில், இந்த ஆண்டு நவராத்திரி விழாவின் ஒரு பகுதியாக, நொய்டா கோவில்கள்: ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், செக்டார் 62, மேலும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோவில் செக்டார் 22 நடைபெற்றது. நொய்டாவில் பதிவுசெய்யப்பட்ட அமைப்பான வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் மூலம் நிர்வகிக்கப்படுகிறது, இது முப்பது ஆண்டு களுக்கும் மேலாக சேவை செய்து வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் போலவே, ' கொலு' செக்டார் 62 கோவில் வளாகத்திலும் வைக்கப் பட்டது. முதல் நாள் கணபதி பூஜையுடன் துவங்கிய விளக்கு பூஜையில் அறுபதுக்கும் மேற்பட்ட பெண்மணிகள் கலந்து கொண்டனர்.

மேலும், அனைத்து நாட்களிலும், தினமும் காலையில், ஸ்ரீ துர்க்கை மற்றும் ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம், ஸ்ரீ துர்க்கைக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை, ஸ்ரீ சரஸ்வதிக்கு ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் ஆகியவை நடைபெற்றன.

தினமும் மாலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இரண்டாவது நாளில், ஸ்ரீவிஸ்வநாதன் மற்றும் குழுவினர் நாமசங்கீர்த்தனமும், அதைத் தொடர்ந்து 'அடுத்த தலைமுறையினரின்' பஜனைகளும், ஜி இளங்கோவன் மற்றும் குழுவினர், தேவி கிருதிகளும் வழங்கினர். லிட்டில் மாஸ்டர் ஸ்கந்தன் புல்லாங்குழல் வாசித்தார். ஜான்வி ராஜாராமின் சீடர்கள் பரதநாட்டியம் வழங்கினர். இந்த நிகழ்ச்சியை, புது தில்லி ராமகிருஷ்ணபுரம் தென்னிந்திய சங்கம் மற்றும் வேதிக் பிரச்சார் சன்ஸ்தான் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. அஷ்டமி தினத்தன்று, கோவில் நிர்வாகத்தால், ஸ்ரீ துர்கா ஹோமம் ஏற்பாடு செய்யப்பட்டது. கோயில் நிர்வாகம், இந்த ஆண்டு ஸ்ரீ ராம் சரித்ர மானஸ் சமிதியால் சுந்தர காண்ட பாராயணத்தையும், ஸ்ரீ ராதே சேவா சமிதியால் ஸ்ரீ மா துர்கா ஜாக்ரனையும் ஏற்பாடு செய்திருந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு அன்னதானமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பெண்கள் பிரிவு தினமும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலிலும், மாலையில் ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோயிலிலும், செக்டார் 62, நொய்டாவில், தினமும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் மற்றும் பிற தேவி ஸ்லோகங்களை வழங்கினர். மேலும், நம் பாரம்பரியத்தை தொடரவும், அடுத்த தலைமுறையினர் இதுபோன்ற விஷயங்களில் ஆர்வத்தை வளர்க்கவும், இந்த கோவிலில் 'கொலு' வைக்கப்படுகிறது. நொய்டாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கோயிலுக்குச் சென்று அருள் பெற்றனர். ஸ்பான்சர்கள், தன்னார்வத் தொண்டர்கள், மற்றும் மகளிர் பிரிவு ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலியின் சேவைகளையும் கோயில் நிர்வாகம் பாராட்டியது.



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# ஆதிசங்கரர் அருளிய இறுதி உபதேசம்

(ஸோபான பஞ்சகம்)

e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத்தில் பல்வேறு புரட்சிகளை செய்தவர் ஆதி சங்கரர், இந்து மதத்தை ஒருங்கிணைத்து பல்வேறு பிரிவுகளை ஒன்றாக்கியவரும் இவரே, ஆன்மிகத்தில் பல்வேறுவகையில் பல்வேறு உபதேசங்கள், அறிவுரைகளை வழங்கி பல்வேறு மூடப்பழக்கவழக்கங்களை வேர றுத்தவர் இவர்.

சங்கரர் கடைசியாக செய்த உபதேசம் ஸோபான பஞ்சகம் என்ற பெயரால் அழைக்கப் படுகிறது. ஸோபானம் என்றால் படிகளின் வரிசை என்று பொருள். பங்சகம் என்றால் ஐந்து என்று அர்த்தம். ஸோபான பஞ்சகம் என்பது ஐந்து சுலோகங்கள் கொண்ட சிறிய நூலாகும். இதனை உபதேச பஞ்சகம் அல்லது ஸாதனா பஞ்சகம் எனவும் கூறுவர். இதில் சங்கரர் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைய நாற்பது படிகளைக் கடக்க வேண்டும் என்று விளக்குகிறார்.

- தினந்தோறும் தவறாமல் வேதம் ஓது. அதில் விதித்துள்ள கர்மாக்களை முறைப்படி செய். பகவானை திருப்பி செய்ய பூஜைகள் செய். இவ்வாறு நீ செய்யும் கர்மாக்களின் பலனை எதிர்நோக்காமல் “இது பகவானுக்கு” என அர்ப்பணம் செய்து விடு. வாழ்க்கை நெறி முறைகளை மீறி நடந்ததினால் குவிந்துள்ள உன் பாவ மூட்டையைச் சிறிது சிறிதாகக் கரைத்து விட்டு விடு, இதனால் சித்த சுத்தி ஏற்படும். இந்நிலையில் சம்சார தோஷங்களை துருவி





அலசிப்பார்ப்பாயாகில் ஞான மார்க்கத்தில் அது கொண்டு விடும். இப்போது உனக்கு நித்யா நித்ய வஸ்துக்களின் அறிவு ஏற்படும். அநித்ய வஸ்துக்களில் வைராக்கியம் ஏற்படும் போது இடையில் தடை ஏற்படுமாகின். வீட்டை விட்டு (அடுத்த ஆசிரமத்தில் நுழைந்து விடு) வெளிச் சென்று விடு.

● நீ ஸத்ஸங்கத்திலேயே நிலைத்திரு. பகவத் பக்தியை திடமாக்கிக் கொள். சமாதி சட்க ஸம்பத்திகளுடன் நீ மோட்ச வேட்கையோடு ஆத்ம விசாரம் செய். பின்னர் கர்மாக்கள் பிறவிச்சுழலில் தள்ளிவிடும் என உணர்ந்து கர்மாக்களை விட்டு விடு. பிறகு ஆத்ம ஞானி ஒருவரை அடைந்து, குற்றேவல் புரிந்து கேட்பாயாகில், அவர் கருணை கூர்ந்து ஆத்ம ஞானத்தை உபதேசிப்பார். (ப.கீ.434). உபநிஷத்துக்களில் கூறும் தத் த்வம் அஸி போன்ற மகா வாக்கியங்களின் உட்பொருளை உணர்ந்து கொள்வாயாக.

● மகா வாக்யார்த்தங்களை விசாரணை செய். ச்ருதியை பிரமாணமாகக் கொள். வேதங்கட்கு மாறாக வாதாடுவோரிடமிருந்து விலகி இரு. வேதங்களின் உட்கொருளை உணர தர்க்கம் என்ற புத்திக் கூர்மையை ஆயிதமாகக் கொண்டு அக்ஞானம் என்ற அசுரனை வெட்டிவிடு. நான் உடலல்ல பிரம்மமே என்பதை உணர்ந்து கொள். இவ்வறிவு பெற்ற பின் அகந்தையை அணுகவிடாதே. அறிவாளிகளிடம் வாதம் செய்யாதே.

● பசி என்ற நோயைத் தீர்க்க மருந்தெனக் கருதி கிடைத்த உணவை மிதமாக உட்கொள் நாவிற்கு ருசியான உணவில் ஆசையைத் துறந்து பிச்சை எடு. சுகத்தையும் துக்கத்தையும் சமமாகக் கருதிக் செயல்படு. பொன் போன்ற நேரத்தை வெட்டிப் பேச்சில் ஈடுபடுத்தாதே. பதவியில் உள்ளவர்களையும் தனவான்களையும் புகழ்ந்து தன் காரியததைச் சாதித்துக் கொள்ள விரும்பாதே.

● ஏகாந்தமான இடத்தில் ஆசனத்தில் அமர்ந்து பர பிரம்ஹ்த்தைப் பற்றியே சிந்தித்திரு. பிரஹ்மும் பூர்ணம், இந்த ஜகத்தும் பூரணம், பூர்ணமான பிரம்மத்திலிருந்து பூர்ணமான ஜகத் வந்த பின் எஞ்சியிருப்பதும் பூர்ணம் என அறிந்து பூர்ணாத்மாவினை தரிசனம் செய். நீ செய்த கர்மாக்களின் பலனை ஞானத்தால் எரித்து விடு. பலன் தரத் தொடங்கிவிட்ட கர்மாக்களின் பலனைப் புரதத்தே தீர்த்துவிடு. பிரஹ்மத்திலேயே நிலைத்திருப்பதில் தயக்கம் காட்டாதே.

என் அருமை சிஷ்யர்களே உங்களுக்கு இதுவே என் இறுதியான உபதேசம்.

இவ்வாறு உபதேச மொழிகள் வழங்கிய பின் ஆதிசங்கரர் காமாட்சி அம்மன் சந்நிதியில் பரிபூரணம் அடைந்தார்.



# திருப்பதி கோவிலில் 10 நாட்கள் வைகுண்ட வாசல் பிரவேசத்திற்கு அனுமதி

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 10 நாட்கள் பக்தர்களுக்கு வைகுண்ட வாசல் பிரவேசம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு டிசம்பர் மாதம் 23ம் தேதி முதல் 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதி வரை திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சொர்க்கவாசல் திறந்திருக்கும். நாள் ஒன்றுக்கு 300 ரூபாய் தரிசனம் மூலம் 20 ஆயிரம் பக்தர்களும், இலவச தரிசனம் மூலம் 50 ஆயிரம் பக்தர் களும் வைகுண்ட வாசல் பிரவேசம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவச தரிசன டோக்கன் வழங்குவதற்காக திருப்பதியில் 10 இடங்களில் கவுண்டர்கள் அமைக்கப்படும். நாள் ஒன்றுக்கு50 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் 10 நாட்களுக்கும் சேர்த்து 5 லட்சம் இலவச தரிசன டோக்கன்கள் வழங்கப்படும். இலவச தரிசன டோக்கன்களை ஆதார் அட்டைகளை சமர்ப்பித்து பக்தர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த மாதம் 29ம் தேதி ஏற்பட இருக்கும் சந்திர கிரகணத்தை முன்னிட்டு 28ம் தேதி இரவு 7.05 மணிக்கு ஏழுமலையான் கோவில் நடை அடைக்கப்படும். மீண்டும் மறுநாள் அதிகாலை 3.15 மணிக்கு நடை திறக்கப்படும். தொடர்ந்து கோவில் முழுவதும் சம்பிரதாய ரீதியில் சுத்தம் செய்யப்பட்டு சுப்ரபாதம், தோமாலை, அர்ச்சனை ஆகிய சேவைகள் ஏழுமலையானுக்கு நடத்தப்படும். தொடர்ந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூரில் மஹாகந்தசஷ்டித் திருவிழா

திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி திருக்கோவில் மஹாகந்தசஷ்டித் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

அதன்படி...


தீபாவளிக்கு அடுத்த நாள் 13.11.2023 திங்கட்கிழமை முதல் 19.11.2023 ஞாயிறுக் கிழமை வரை கந்தசஷ்டித்திருவிழா நடை பெறும்.

13.11.2023 ஞாயிறுக்கிழமை முதல் 18 .11.2023 சனிக்கிழமை வரை காலை யாக சாலை மண்டபத்தில் யாகசாலைபூஜை நடை பெறும்

18112023 சனிக்கிழமை மதியம் 2:00 மணிக்குமேல் சூரபத்மன் எட்டு வீதிகளிலும் உலாவந்து சன்னதிதெரு வழியாக கடற்கரையில் சேர்கிறார்.

அன்றைய தினம் மாலை 4:00 மணிக்கு மேல் கந்தசஷ்டி மண்டபத்தில் இருந்து அருள்மிகு ஸ்ரீ ஜெயந்திநாதர் சுவாமி எழுந்தருளி கடற்கரையில் சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நடைபெறும்.

19.11.2023 ஞாயிறுக்கிழமை திருக் கல்யாணம் நிகழ்ச்சி காலை திருக்கோவிலில் இருந்து அருள்தரும் தெய்வானை அம்பாள் எழுந்தருளி தெப்பக்குளத்தில் உள்ள மண்டபத்தில் சேர்க்கை நடைபெறும் மற்றும் அன்று மாலை அருள்மிகு ஸ்ரீ குமரவிடங்கபெருமான் எழுந்தருளி தெப்பக் குளத்தில் அருகில் மாலை மாற்றுதல் நடைபெற்று எட்டுத் திருவீதிகளிலும் உலா வந்து திருக்கோவிலில் வைத்து திருக்கல்யாணம் நடை பெறும்.



தொகுப்பு – முதன்மை செய்தியாளர் அழகுராஜா 9994162182

# அனுஷ்டானம், தெய்வீக ஒழுக்கம் இல்லாததால் கடவுளைப் பார்க்க முடியவில்லை

சீடன்: பூஜை என்றால் என்ன?

ஞானி: வண்டியை சரி செய்வது போன்றது.

சீடன்: சாக்த மதம் என்றால் என்ன?

ஞானி: ஆக்க பூர்வ சக்தியை உள்ளடக்கி வைப்பது.

சீடன்: விரிவுரைகள் எதற்கு?

ஞானி: பக்தி வருவதற்கு. ஆழமாய் செல்வதற்கு.

சீடன்: கவிஞன் என்பவன் யார்?

ஞானி: முடிவைத் தருபவன்.

சீடன்: இயக்கம் எப்பொழுது துவங்குகிறது?

ஞானி: மனம் சிந்தனையோடு சேரும்போது.

சீடன்: மந்திரம் எப்பொழுது செயல்படுகிறது?

ஞானி: பராக்கிரமத்துடன் சொல்லும்போது.

சீடன்: சக்தி எப்பொழுது பிறக்கிறது?

ஞானி: விஷயத்தை ஈர்த்துக் கொள்ளம்போது.

சீடன்: எது புலம்பும்? எது புலம்பாது?

ஞானி: நியாயங்கள் புலம்பும். உண்மை புலம்பாது.

சீடன்: மதம் எதை போதிக்கிறது?

ஞானி: பயத்தை நாமே முயற்சி செய்து போக்க.

சீடன்: பயம் எப்பொழுது மறைகிறது?

ஞானி: அறிவு வெளிப்படும்போது.

சீடன்: தெய்வீகத்தின் மேன்மை என்ன?

ஞானி: மனிதனை மாற்றி மேல்நிலைக்கு அனுப்பும் பணி.

சீடன்: எதை அறுக்கவேண்டும்?

ஞானி: பற்றை அறுக்க வேண்டும்.

சீடன்: எதைப் பற்ற வேண்டும்?



ஞானி: பற்றுக் கோடான இறைவனைப் பற்ற வேண்டும்.

சீடன்: எது சமயம்?

ஞானி: இதயத்தில் திருப்தி வந்தால் அது சமயம்.

சீடன்: இறைவனை எப்பொழுது வணங்க முடியும்?

ஞானி: உன்னிடம் உள்ள குறைகளை உணரும்போது.

சீடன்: கடவுளைப் பார்க்க முடியாதது எதனால்?

ஞானி: அனுஷ்டானம், தெய்வீக ஒழுக்கம் இல்லாததால்.

சீடன்: மனிதனை எது வளர்க்கிறது?

ஞானி: குணம் மனிதனை வளர்க்கிறது.

சீடன்: வெற்றி எப்பொழுது கிடைக்கிறது?

ஞானி: வீரமும் விருப்பமும் ஒன்றாகும்போது.

சீடன்: கடவுளை நினைக்க எதைக் களைய வேண்டும்?

ஞானி: மனச் சலனத்தை.

சீடன்: பக்தி எப்பொழுது வருகிறது?

ஞானி: இறைவனைக் காண வேண்டும் என்ற ஏக்கம் வரும் போது.

சீடன்: மஹான்களை தரிசிப்பது எதற்காக?

ஞானி: அதிர்ப்தியை தீர்த்து திருப்தி கொள்ள.

சீடன்: இறைவனிடம் எதிர் பார்ப்பது தவறா?

ஞானி: எதிர் பார்த்தால் பாடுபட வேண்டியிருக்கும்.

சீடன்: நமது வீரம் எப்படி இருக்க வேண்டும்?

ஞானி: நம் குற்றங்களை

e-magazine

aanmeegamalar.com

களைவதிலே.

சீடன்: மனிதனின் சுத்தமான பக்கம் எது?

ஞானி: மனிதனின் உள் பக்கமான மனது. அது சுத்தமாக இருந்தால் ஞானம் பிறக்கிறது.

சீடன்: வெளி பக்கம் என்று உண்டா?

ஞானி: (சிரித்தபடி) பரபக்கம் என்று நமக்குத் தெரியாத உயர்ந்த விஷயங்களை உணர்த்துபவன் இறைவன்.

சீடன்: பாசங்களில் கட்டுண்டு கஷ்டப்படுவதை தவிர்ப்பது எப்படி?

ஞானி: உண்மையான பாசம் எது என்பது புரியும்போது.

சீடன்: இது எப்பொழுது சாத்தியம் சுவாமி?

ஞானி: குருவிடம் உபதேசங்களை பெற்று அதை உண்மையுடன் பின்பற்றினால் சாதுத்தன்மையுடைய "பசு" போன்ற உயிர் புண்ணியம் அடைந்து "பதி" என்ற சிவபெருமானிடம் தங்க இடம் கிடைக்கும். அப்பொழுது "பாசம்" என்பதின் உண மைத் தன்மையை உணர்ந்து கடமையை மட்டும் செய்வான். அப்பொழுது அனைத்தும் விளங்கும்.

சீடன்: மஹான்களை சரியாக புரிந்து கொள்ள முடிவதில்லை லயே?

ஆன்மிகமலர் .காம்

ஞானி: மனதை புரிந்து கொள்ளாதவர்களால் அது முடியாது.

சீடன்: ஒழுக்கமாக இருக்க ஏன் மனிதன் கஷ்டப்படு கிறான்?

ஞானி: ஆராய்ச்சி செய்யாமலே அதை கடினம் என்கிறான் மனிதன்.

சீடன்: ஒழுக்கம் சர்ச்சைக்குரியதாகி விட்டதே?

ஞானி: கருத்து மாறுபாடு இருந்தால் தான் அபிப்ராயம் உண்டாகும். ஒழுக்கம் பற்றி இரண்டு அபிப்ராயங்கள் இருக்காது.

சீடன்: பின் ஏன் சராசரி மனிதன் பயப்படுகிறான்?

ஞானி: ஒழுக்கமாய் இருந்தால் கலியுகத்தில் துனபம் என எண்ணும் மனிதன் எப்பொழுது அது சுகம் என் காண்கிறானோ அப் பொழுது அதை விடமாட்டான். கடவுளை எண்ணி இதை ஆராய்ந்தால் சுகம்.

சீடன்: சட்டத்தால் ஒழுக்கம் வருமா?


ஞானி: எப்பொழுது அவை மனிதனின் பழக்கவழக்கங்களாக மாறு கிறதோ அப்பொழுது ஒழுக்கம் இயற்கையாகிவிடும்.

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன்**

**C.V. நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:

அழகுராஜா

செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,

குருபிரியா

வேல் செல்

♦♦♦

வடிவமைப்பு

SML கிராபிக்ஸ்

செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்

**9444228203**


e-magazine
aanmeegamalar.com





# ஆபத்துகளில் இருந்து காக்கும்
# ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர்

காவிரித்தாய் வளமாக்கும் திருவூர்கள் நிறைந்த வளங்கொழிக்கும் சோழ நன்நாட்டின் தேவாரத் தலங்களுல் தென்கரை மீது 31வது தலமாக அமையப்பெற்றுள்ளது தென்குரங்காடு துறை.

தற்போது இத்தலம் ஆடுதுறை என்று அழைக் கப்படுகின்றது.

இரண்டு குரங்காடுதுறைகள் உண்டு சோழ தேசத்தில். ஒன்று காவிரி வடகரையின் மீது திருவையாறுக்கு அருகில் உள்ளது... வட குரங்காடுதுறை. மற்றொன்று ஆடுதுறை எனப் படும் இந்த தென்குரங்காடுதுறை ஆகும்.

எதிர்க்கும் எதிரியின் பாதி பலத்தைப் பெற்று விடும் வரம் பெற்ற வாலிக்கு பயந்து, இத்தலத்தில் தஞ்சம் புகுந்த சுக்ரீவன்...அஞ்சி, நடுங்கி, ஆடி இறைவனை வழிபட்டதால் குரங்காடுதுறை ஆனது. காவிரியின் தென்கரையில் இத்தலம் அமையப்பெற்றுள்ளதால் தென் குரங்காடுதுறை என்றானது. வாலி தன்னை பின் தொடர்ந்து இங்கு வந்துவிட்டதை அறிந்த சுக்ரீவன் இத்தலத்தில் சிவனாரை பூஜிக்கின்றான். சிவபெருமான் சுக்ரீவனை அன்னப்பறவையாக மாற்றி, அவனை ஆபத்திலிருந்து மீட்டுக் காத்துள்ளார். இதன் காரணமாக இத்தல பெருமாள் “ஆபத்சகாயேஸ்வரர்” என்று போற்ற லானார்.

அகத்தியர் இங்கு சொர்ண பைரவர் திரு வுருவத்தினை பிரதிஷ்டை செய்து, வழிபட்டு, வரங்கள் பல பெற்று மகிழுந்தார். அதோடு, உடன் வந்த ஏனைய ரிஷிகளுக்கும் இறைவனிடம் திருநடனக் காட்சியை வேண்டிட, அதன்படி ஈசன் நடனக் கோலம் காட்டியருளினார்.

ஆதலால் இவ்விடம் ,”நடராஜபுரம்“ என்று போற்றப்பட்டது. தென் பிரகார கோஷ்டத்தில் அகத்தியர் மற்றும் நடராஜரின் கல்சிற்ப வடிவங் களைக் கண்ணுறலாம்.

முன்பு ஓர் சமயம் கயிலை மலையில் கல்லும் கரைந்து உருகும்படி இசைப்பாடிக் கொண் டிருந்தார் அனுமன். அவ்வழியே வந்த நாரதர், இவ்விசை கேட்டு மெய்மறந்து அமர்ந்துவிட்டார்.

e-magazine
aanmeegamalar.com





e-magazine
aanmeegamalar.com

பின் அவர் புறப்படும்போது கீழே வைத்திருந்த ‘மஹதி’ எனும் வீணை மீது பனி மூடியதால் எடுக்க முடியாமல் தவித்தார். இதற்குக் காரண மான அனுமனை...."நீ உன் இசையை மறப்பாய்" என சபித்தார். இதனால் மனம் வருந்திய அனுமன், சுக்ரீவன் வழிபட்ட இத்தலம் எய்தி, ஆபத்சகாயரை மனமுருகி வழிபட்டார். மறந்து போன இசை ஞானத்தை மீண்டும் பெற்று மகிழ்ந்தார்.

திருமங்கலக்குடியில் வாழ்ந்து வந்த ஓர் வைணவப் பெண் ஆபத்சகாயர் மீது அளவற்ற பக்தி கொண்டு வழிபட்டு வந்தாள். நிறைமாத கர்ப்பிணியாக இருந்தபோது அவள் ஆடுதுறை இறைவனை தரிசிக்க வந்தாள். தரிசித்துவிட்டு திரும்புகையில் காவிரியில் வெள்ளம் பெருகியது. ஓடக்காரனும் இல்லை. ஊர் செல்ல இயலாமல் மீண்டும் இத்தலம் திரும்பினாள். வலி ஏற்பட்டு, துடித்தாள். இறைவன் தாயாகத் தோன்றி பிரசவம் பார்த்தார். சுகப்பிரசவம் ஆனது. பின் திருமங்கலக்குடி சென்று அவளது பெற்றோரிடம், தாயும் சேயும் நலம் எனக் கூறி ஆடுதுறைக்கு அழைத்து வந்து மறைந்தார் சிவபெருமான்.

கஞ்சனூரில் வாழ்ந்த ஹரதத்தர் தினமும் கஞ் சனூர், ஆடுதுறை உட்பட ஏழு சிவாலயங்களை தரிசிப்பது வழக்கம். ஒருமுறை ஆடுதுறையை வழிபட்டு திரும்புகையில் கடும் மழை பெய்தது. இருள் சூழ்ந்தது. வழியறியாது திகைத்து நின்ற ஹரதத்தருக்கு ஓர் வயோதிக அந்தணர் வடிவம் கொண்டு, கோல் தாங்கிய கையினராய் அவருக்கு வழித்துணையாகச் சென்று, இல்லத்தில் விட்டு வந்துள்ளார்.

திருஞானசம்பந்தர் ஒரு பதிகமும், திருநாவுக்கரசர் ஒரு பதிகமும் தலம் மீது பாடியருளியுள்ளனர்.

அருணகிரிநாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் பாமாலை ஒன்றை சூட்டியுள்ளார்.

கண்டராதித்தச் சோழனின் மனைவியார் செம்பியன்மாதேவி கட்டிய பெரியதொரு கோயில் நெடுஞ்சாலைக்கு சற்றுத்தள்ளி பிரம்மாண்டமாக அமைந்துள்ளது. கோவிலுக்கு முன்பு சகாய தீர்த்தக்குளம் அமைந்துள்ளது. இரண்டு சுற்றுகள் கொண்ட இவ்வாலயம் அழகிய மூன்று நிலை இராஜகோபுரம் கொண்டுத் திகழ்கிறது. நீண்டு காணப்படுகின்றது. முதலில் துவார கணபதி,



e-magazine
aanmeegamalar.com

நந்தி, பலிபீடம், கொடிமரம் காணப்படுகின்றன. பின்னர் வெளிப்புற மண்டபம் வருகிறது. கடந்து செல்ல.... மகாமண்டபம் மூடுதளமாக உள்ளது. அதன் இடப்புறம் அம்பிகை சன்னிதி. கருவறையுள் சிறிய ரூபத்தில் சிரித்தவண்ணம் அருட்கடாக்ஷிக்கின்றாள் ஸ்ரீ பவளக்கொடியம்மை.

மீண்டும் மகாமண்டபம் வந்து நேராக நடக்க... இடை மண்டபம் வருகின்றது. வாயிலின் மேல் மாடத்தில் சுக்ரீவனை இறைவன் அன்னப்பறவையாகவும், அவன் துணைவியை பாரிஜாத மரமாகவும் உருமாற்றியருளிய தல வரலாற்றுக் காட்சி சுதை வேலைப்பாட்டில் அமைந்துள்ளதை காணலாம். அதன் வலப்புறம் வெளியே செல்ல வழி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக அர்த்த மண்டபம், மூலஸ்தானம். மூலஸ்தானத்தில் அற்புத லிங்கத் திருமேனி கொண்டு க்ருபாகடாக்ஷிக்கின்றார் ஸ்ரீ ஆபத் சகாயேஸ்வரர். ஆபத்தென்று வருவோர் தம் துயர் நீக்கி ரட்சித்து அருள வல்லவர்.



ஈசனது அருட்தரிசனம் முடித்து, வலம் வருகிறோம். சுவாமி கரு வறை அகழி அமைப்புடையது. தேவ கோஷ்டத்தில் முறை யான தெய்வங்களைக் கண்ணுறுகின் றோம். மூத்த பிள்ளையாரின் சன்னிதி ஆலய நிருர்தி மூலையிலும், முருகன் சன்னிதி ஆலய வாயு மூலையிலும் அமைந்துள்ளது. கந்தன் ஆறுமுகப் பெருமானாக தனது இரு துணைவிகளோடு அற்புதமாக காட்சி அளிக்கின்றார்.


பின்வரிசையில் காசி விஸ்வ



மோ.கணேஷ்

நாதர் விசாலாட்சியோடு நால்வர், கஜலட்சுமி சிலா ரூபங்கள் காட்சிக்கின்றன.

இத்தல துர்க்கை மிகவும் விசேஷமானவள். தன்னை வந்து சரணடைவோர் தம் வினைகளை அகற்றி, அருள் புரிந்து காக்கின்றாள். அருகே கங்காவிசர்ஜன மூர்த்தி



e-magazine
aanmeegamalar.com

காட்சி கொடுக்கின்றார்.

அறுபத்துமூவர் கற்சிலைகளும் இங்கே பாங்குற அமையப்பெற்றுள்ளது. சொர்ண கால பைரவர் இங்கு விசேடமாக உள்ளார். ஹரதத் தருக்கும் இங்கே சிலை உள்ளது. சோழர்கால 15 கல்வெட்டுக்கள் சுவாமி சன்னிதியின் வெளிப்புற சுவரில் நிறைந்து காணப்படுகின்றன.

இத்தலத்தின் விருக்ஷமாக பாரிஜாத மரம் வெளிப்பிராகாரத்தில் கவினுற திகழ்கிறது. வாசம் மிகுந்த இதன் பூக்கள் இறைவன் இறைவிக்கு மிகவும் ஏற்வையாகும்.

ஆண்டுதோறும் சித்திரை 5, 6, 7 ஆகிய தேதிகளில் சூரிய பூஜை விமரிசையாக நடைபெறு கின்றது.இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயத்தில் தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெறுகின்றன. தினமும் காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 30 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.

அனைத்து சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன.

திருமங்கலக்குடி, சூரியனார் கோவில், திருவிடைமருதூர் போன்ற தலங்கள் அருகில் அமைந்துள்ளன.

இத்தல வழிபாடு வாழ்வில் வரும் பெரும் ஆபத்துகளை நீக்கவல்லது என்பது இங்கு நிலவும் நம்பிக்கையாகும்.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலுகாவில்.. கும்பகோணம் மயிலாடுதுறை இடையே பேரூராட்சியாக விளங்குகின்றது ஆடுதுறை.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# இருளை நீக்கும் தீபாவளியும் அன்று கூறவேண்டிய மந்திரமும்



உலகத்தின் இருளை நீக்கி, ஒளியை ஏற்படுத்தும் பண்டிகையாய் உள்ளது தீபாவளி பண்டிகை. இந்த ஆண்டு தீபாவளி அன்று பல பூஜைகளும், விரதங்களும் கடைப் பிடிக்கப்படுகிறது. ஆனால் பூஜைகள் மற்றும் விரதங்களை தாண்டி சரியான மந்திரங்களையும் நாம் தெரிந்து கொண்டு உச்சரிப்பதால் நமக்கு நற்பலன்கள் கிடைத்திடும். நம் வாழ்க்கையில் இருக்கும் இருளும் நீங்கி ஒளிபிறக்கும்.

தீபாவளி திருநாளான்று ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு தெய்வங்கள் இருப்பதாய் ஐதீகம். அந்த பணிகளை செய்யும் போது அந்தந்த தெய்வங்களுக்கான மந்திரங்களை உச்சரிப்பதால் நலன் பெற முடியும். தீபாவளி அன்று எல்லா நீர்நிலைகளிலும் கங்கை அம்மனும், விளக்குகளாக காமாட்சி அம்மனும், அந்த விளக்குகளில் ஏற்படும் ஒளியாக மகாலட்சுமியும் வசித்து வருவதாக கூறப்படுகிறது. அதனால் தீபாவளி திருநாளில் நாம் அனைவரும் அதிகாலை எழுந்து எண்ணெய் தேய்த்து நீராடி, விளக்கேற்றி இறைவனை வணங்கும் போது

e-magazine
aanmeegamalar.com

அவர்களுக்கான மந்திரத்துடன் வழிபடும் போது நம் வாழ்வு பிரகாசிக்கும்.

எப்போதும் தீபாவளியன்று அதிகாலையில் சூரியன் உதயம் ஆவதற்கு முன்பாகவே எழுந்து, உடல் முழுதும் நல்ல எண்ணெய் எனப்படும் எள்ளு எண்ணையை தேய்த்து சுடுநீரில் குளிப்பதை நாம் வழக்கமாக வைத்துள்ளோம். அப்படி நீராடுவதற்கு முன்பாக, நீங்கள் குளிக்க எடுத்து வைத்திருக்கும் நீரை சிறிதளவு கையில் எடுத்து,

"ஓம் நம சிவாயை நாராயண்யை தச தோஷ
ஹராயை கங்காயை ஷ்வாஹா"

என்கிற மந்திரத்தை துதித்து விட்டு நீராடினால் நல்லது. இந்த மந்திரத்தை நாம் துதிப்பதன் மூலமாக கங்கை அம்மனை வணங்குகிறோம். அதாவது சிவ பெருமானின் சடையில் வசிப்பவள் கங்கை. அதனால் சிவனின் திருச்சடையில் இருப்பவளே, நாரணன் பாதத்தை நீராட்டி மகிழ்பவளே, எல்லா விதமான பாவங்களையும் போக்குபவளே உம்மை வணங்குகிறேன் என்பதே இம்மந்திரம்.

நாம் நீராடி முடித்ததும் புத்தாடைகள் அணிந்து, இறைவனை வணங்க விளக்கேற்றுவோம். அப்படி விளக்கு ஏற்றுவதற்கு முன்பாக விளக்காகவே இருக்கும் காமாட்சி அம்மனை வணங்குவது அவசியம்.

"ஸ்ரீசக்ர மத்யே வசந்தீம்பூத
ராட்சச பிஸாசாதி துஷ்டான் ஹரந்தீம்
ஸ்ரீகாமக்கோட்யாம் ஜ்வலந்தீம்காம
ஹுனஸ்ஸூ காம்யாம் பஜே தேஹி வாசம்"

இந்த மந்திரத்தை உச்சரிக்கலாம். இதற்கு ஸ்ரீ சக்கரத்தின் நடுவினில் வசிப்பவளே, பூதம், பிசாசு, ராட்சசர்கள் போன்ற துஷ்ட சக்திகளை அழித்து காப்பவளே, காமக்கோடியில் பிராகாசித்து இருப்பவளே, ஆசையற்றவர்களால் எளிதாய் அடைய கூடியவளே, பக்தர்களின் தேவை அறிந்து அதனை ஈடேற்ற கூடியவளே, எங்கள் காமாட்சி அன்னையே உம்மை வணங்கி வழிபடுகிறோம். எல்லா விதமான நன்மைகளையும் தந்தருள் வாயாக என்பதே அர்த்தம்.



இதையடுத்து விளக்கேற்றி அதில் இருந்து வரும் ஒளியை வணங்கிட வேண்டும்.

"ஓம் ஸ்ரீயே ஸ்ரீகரி தனகரி தான்யகரி
ஏஹ்யா அச்ய பகவதி வஸூதாரே ஸ்வாஹா"

இந்த மந்திரத்தை உச்சரிப்பதன் மூலமாய் செல்வ மகளே, அனைத்து விதமான செல்வங்களின் வடிவாய் இருந்து தனமும், தானியமும் போன்ற எல்லாம் கிடைத்திட அருள்பவளே, ஒப்பில்லாதவளே தந்து பக்தர்கள் மீது கருணையை மழைபோல் பொழிந்து வருபவளே உன்னை வணங்குகிறேன் என்பதே.



# தங்ககாசு, வெள்ளிக்காசை தீபாவளியன்று பிரசாதமாக தரும்

# மகாலட்சுமி ஆலயம்

வட இந்தியாவில் தீபாவளி பண்டிகை ஐந்து அல்லது ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. மத்தியபிரதேச மாநிலத்தில், "மால்வா பகுதியில் ரத்லாம் மாவட்டத்தில் ரத்லாம் நகரின் மத்தியில் அமைந்துள்ள லக்ஷ்மன்புரா பகுதியில் மானக் சௌக் " என்ற இடத்தில் அமைந்துள்ளது ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயில்

இந்த பகுதி இந்தியாவில் 24 கேரட், தங்க வணிகத்திற்கு பெயர் பெற்ற ஊர் ஆகும். தங்கமும்" நவரத்தினமும் பிரபலமாக இருக்கும் இந்த நகரை ரத்தினபுரி என்றும் அழைக் கிறார்கள்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு. இரண்டு நாட்களுக்கு முன்பாகவே இங்கு தீபாவளி கொண்டாட்டம் தொடங்கி விடுகிறது.

முதல்நாளில் அதாவது துவாதசி நாளில் பசுவையும், கன்றையும் வழிபடும் விழா நடை பெறுகிறது. இதனை நந்தினி விரதம் என்று கொண்டாடுகிறார்கள்!

இரண்டாம் நாளில் மூன்றாம் நாளில் தன்வந்திரி ஜயந்தி என்று கொண்டாடுகிறார்கள்!...

தீபாவளி நாளை நரக சதுர்த்தி "என்று. கொண்டாடுகிறார்கள். நான்காம் நாளில் கேதார கௌரி விரதம் என்றும் ஸ்ரீமஹாலக்ஷ்மி பூஜை நாள் என்றும் கொண்டாடுகிறார்கள்.

ஐந்தாம் நாளில் கோவர்த்தன பூஜை என்று கொண்டாடுகிறார்கள்.

ஆறாம் நாளில் யமத்துவிதியை என்றும். பையா தூஜ் என்றும் கொண்டாடுகிறார்கள்!.

இப்படி தீபாவளியை லக்ஷ்மி குபேர பூஜை என்று கூறி குபேரனையும் ஸ்ரீ மகாலக்ஷ்மியையும் ஒன்றாக வழிபட்டு வளம் பெற வாழ்கிறார்கள்.

நாடு முழுவதும் கோயில்களில் பிரசாதமாக திருநீறு குங்குமம் மஞ்சள் சந்தனம் மலர்கள் வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார்கள்.

ஆனால்!! இங்குள்ள.. ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயிலில் மட்டும்.. தீபாவளி நாளில் தரிசனம் செய்ய கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு

e-magazine
aanmeegamalar.com





தங்கம் வெள்ளி நாணயங்களை பிரசாதமாக வழங்குகிறார்கள்!!

இது எப்படி? சாத்தியமாகிறது எனில் இங்குள்ள பக்தர்களும் மற்றும் நாடு முழுவதும் உள்ள பக்தர்களும் இந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயிலுக்கு வழிபாடு ( தரிசனம் செய்ய வரும்போது “சிறிதும், பெரிதுமான தங்க, வெள்ளி ஆபரணங்களை காணிக்கையாக செலுத்துகிறார்கள் சில வைர நகைகளையும் காணிக்கையாக செலுத்துகிறார்கள் இப்படி ஆண்டு முழுவதும் கிடைக்கும் தங்க. வெள்ளி... ஆபரணங்கள் கோயிலில் நிறைய சேர்ந்து விடுகிறது.

இப்படி பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய தங்க, வெள்ளி ஆபரணத்தின் ஒரு பகுதியை தீபாவளி நாளில் பக்தர்களுக்கு, பிரசாதம் என்று கோயில் நிர்வாகம் வழங்கி வருகிறது!

இது தவிர இன்னம் ஒரு அதியசமும் இந்த கோயிலில் நடைமுறையில் உள்ளது. அதாவது தீபாவளிக்கு முன்பாகவே பக்தர்கள் தங்கள் வீடுகளில் உள்ள தங்கம், வைரம், வெள்ளி ஆபரணங்களை கோயிலில் கொண்டு கொடுத்து இன்னன்ன பொருள்கள் கொடுத்துள்ளோம் என ரசீது பெற்று கொள்கிறார்கள் . அதனை கோயில் நிர்வாகம் பெற்று பாதுகாப்பாக அவரவர் பெயர் பதித்து... அந்த ஆபரணங்களை கொண்டு ஸ்ரீ மஹாலக்ஷ்மியை தீபாவளி நாளில் அலங்கரிக்கிறார்கள்.



கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்

தீபாவளி அன்று கோயில் முழுவதும் தங்கம், வெள்ளி, ஆபரணங்கள் அலங்கரிக்கிறது. இது தவிர கோயில் முகப்பு முதல் கருவறை வரை ரூபாய் நோட்டுக்களை கொண்டு தோரணம் கட்டப்படுகிறது.

இப்படி தீபாவளி நாளில் சுவாமிக்கு அலங்காரம் செய்து முடித்து பின்னர். பக்தர்கள் சுவாமிக்கு அலங்காரம் செய்ய கொடுத்த தங்களின் ஆபரணங்களை ரசீதை காட்டி திரும்ப பெற்று கொள்கிறார்கள். இப்படி சுவாமி அலங்காரத்திற்கு கொடுத்து திருப்பி வாங்கி வீட்டில் வைத்தால் வீட்டில் செல்வம் பெருகும் என்று. பக்தர்கள் நம்புகிறார்கள்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
Free e-book


Scan to Read aanmeegamalar Website

தீபாவளி நாளில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் இந்த அலங்கார. காட்சியை ஸ்ரீ மஹாலக்ஷ்மி தர்பார் என்றும் குபேர தர்பார் என்றும் கூறுகிறார்கள்

ரத்லாம் பேருந்து நிலயத்திருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கோயில் உள்ளது நாட்டிலேயே தங்கம் பிரசாதமாக வழங்கும் ஒரே கோயில் இது தான்.

கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன்,
பெங்களூரு 77.
போன்: 99724 66443

e-magazine
aanmeegamalar.com



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
FREE
170 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
eBook
FREEDOWNLOAD
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
e-magazine
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com



e-magazine
aanmeegamalar.com

## தீபாவளி நாளில் குறைவில்லா செல்வம் கிடைக்க அருளும்

# அன்னபூரணி தாயார்

நாம் உண்ணும் உணவுகள் அனைத்தையும் விளைவிப்பதும், அதற்கு ஆதாரமாய் இருப்பதும் அன்னபூரணியே. இந்த அன்னபூரணியை தனத்திரயோதசி தொடங்கி தீபாவளி வரை தொடர்ந்து மூன்று நாட்கள் விரதமிருந்து பூஜை செய்து வணங்கலாம். நம்முடைய வீட்டில் அன்னபூரணி உருவச்சிலை வைத்து பூஜை செய்து வணங்கிட அனைத்து நலன்களையும் வளங்களையும் தருவாள் அன்னபூரணி.

தீபாவளி நாளில் லட்சுமி குபேர பூஜை செய்வது போல நாம் அன்னபூரணியை விரதமிருந்து வணங்க வற்றாத செல்வங்களும்,

உணவும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

காசியில் அன்னபூரணி அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரத்தில் பால் அன்னம் தந்து உலக உயிர்களின் அன்ன தோஷம் என்னும் வறுமை அண்டாதவாறு அருள்புரிகிறாள்.

தனதிரயோதசி தொடங்கி தீபாவளி, அமாவாசை நாட்களில் காசியில் தங்க மயமாய் காட்சி தரும் அன்னபூரணியை தரிசிக்க வாழ்நாள் முழு வதும் அள்ள அள்ள குறை யாத அன்னத்தையும் செல்வத் தை வழங்கிடுவாள் இந்த நாட்களில் தங்க அன்னபூரணி யை தரிசிக்கவே பெரும்பாலோனோர் காசி யாத்திரை செல்கின்றனர்



காசியில் தீபாவளியன்று அன்ன கூடம் என்ற நிகழ்வில் பலவித உணவுகள், பலகாரங்கள் வைத்து பூஜை செய்து அனைவருக்கும் பிரசாத மாக வழங்கப்படும். மறுநாள் லட்டு தேரில் அன்னபூரணி ஊர்வலம் வருவாள். எண்ணற்ற லட்டுகளால் உருவான தேரில் உள்ள லட்டுக்களை பக்தர்களுக்கு பிரசாதமாக கொடுப்பார்கள்.

அன்னபூரணி அவதாரம் எப்படி நிகழ்ந்தது. அவர் காசிக்கு எப்படி வந்தார் என்பதே ஒரு புராண கதையாக சொல்லப்படுகிறது. நான் முகன் என்று போற்றப்படும் பிரம்மனுக்கு முன்பு ஐந்து தலைகள் இருந்தனவாம். இதனால் கர்வம் அதிகமாக இருந்தது. பார்வதி, பரமசிவன், பிரம்மா ஆகிய மூவருக்கும் இடையேயான சிறு பிரச்சினையில் பிரம்மனின் ஒரு தலையை சிவனார் அறுத்து விட்டார்.

இதனால் சிவனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது. பிரம்மனின் கபாலம் சிவன் கையிலேயே ஒட்டி கொண்டது. இந்த தோஷம் நீங்க பிட்சாட னராக சிவபெருமான் பல இடங்களில் பிச்சை பெற்றார். ஆயினும் சிவன் கையை விட்டு கபாலம் விழவில்லை. அந்த பாத்திரத்தில் எந்த பொருளும் தங்கவில்லை.



அழகுராஜா

அதே நேரம் பிரம்ம தேவனை பார்த்து சிவனார் என நினைத்து வணங்கிய பார்வதி, தனக்குத்தானே தண்டனை கொடுத்துக்கொண்டு அன்னபூரணியாக அவ தரித்து காசியில் தவம் செய்தாள்.

இந்த சமயத்தில்தான் பிட்சாடனாராக வந்த சிவபெருமான் அன்னபூரணியிடம் பிச்சைபெற்றார். அந்த நேரமே பிரம்மனின் கபாலம் சிவபெருமான் கையை விட்டு விலகியது.

சிவனின் பசியை தீர்க்க வந்த அன்னபூரணி உலக பசிப்பிணி தீர்க்க காசியிலேயே தங்கி விட்டார் என்கிறது புராண கதை

காசியில் நவரத்ன சிம்மாசனத்தில் சம்மண மிட்டு அமர்ந்திருக்கும் அன்னையின் ஒருகரத்தில் அட்சய பாத்திரமும், மறு கரத்தில் தங்க கரண்டியுடன் கூடிய தங்கத்தில் ஜொலிக்கும் அன்னபூரணியை தீபாவளியின்போது மூன்று நாட்களுக்கு மட்டுமே தரிசிக்க முடியும்.

அன்னையிடம் பிச்சை கேட்கும் பிட்சாடனார் உருவமும் அருகில் ஆரடி உயரத்தில் உள்ளது. இந்த சிலை வெள்ளியால் செய்யப்பட்டது.

– முதன்மை செய்தியாளர்

அழகுராஜா 9994162182

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்.காம் வழங்கும்




## 2024-ஆம் ஆண்டு மாத காலண்டர் அற்புத தகவல்களுடன் தயாராகிறது

சர்வசுதர்சன நேரம், சுபமுகூர்த்த தினங்கள், பண்டிகைகள் விபரம், அரசு விடுமுறை நாட்கள், அழகிய ஸ்வாமி படங்கள், அற்புத ஆலயங்கள் பற்றிய தகவல்களுடன் உயர்தர ஆர்ட் காகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**அனைத்து புத்தக கடைகளிலும் கிடைக்கும்**

காலண்டர் குறித்து மேலும் தகவல்களுக்கு:

**9994162182 / 9994323622 / 9444228203**